குண்டூசி

ஆகஸ்ட்.....எட்டு அணா

SEP 1948
MADRAS

மதுரை யுனைட்டெட் ஆர்டிஸ்ட்ஸ் தயாரிப்பு

கீத காந்தி

பி.ஏ.பெரிய நாயகி...பி.எஸ். சரோஜா
டி.ஆர்.ராமச்சந்திரன்...வி.குமார்...லலிதா..பத்மினி
...டித்தது

விரைவில் வருகிறது
கிருஷ்ண பிக்சர்ஸ்
ஸ்ரீ கிருஷ்ண பக்தி
நடிகர்கள்
T.R.ராஜகுமாரி
M.L.வசந்தகுமாரி
P.A.பெரியநாயகி
A.R.சகுந்தலா
T.A.மதுரம்
P.U.சின்னப்பா
K.R.ராமசாமி
D.பாலசுப்ரமண்யம்
S.P.L.தனலக்ஷ்மி
N.S.கிருஷ்ணன்
சென்னை உரிமை:
ஸ்ரீ ரத்னா பிக்சர்ஸ்
83, பூனமல்லி ஹைரோடு,
அமிஞ்சிக்கரை சென்னை.10. போன்:3236.
EP.
VENDHAN

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1948
MADRAS
3483

'[illegible]' அபூர்வ சிருஷ்டிக்கு அடையாளம்

மணி, தேதி, கிழமை, மாதம், அமாவாசை, பௌர்ணமி
முதலியவைகளை அறியலாம்.

கனவான்களுக்கு கவர்ச்சி யளிக்கும் பொக்கிஷம். அப்பழுக்கில்லாத எஃகு கட்டிடம், கம்பீரமான தோற்றம். எளிதில் ஓடக்கூடியது, 15 கற்கள் கொண்ட உயர்ந்த லிவர், ரேடியம் டயல் 10½" ஸைஸ்—ரூ. 300.

ஜலால் & ஸன்ஸ்
ஹெட் ஆபீஸ்: ரட்டன் பஜார், மதராஸ்.
கிளைகள்: மவுண்ட் ரோடு, மதராஸ்.
அபிட் ரோடு, ஹைதராபாத், டெக்கான்

கதை மலர்

ஆசிரியர் — "ரூலி"

இலக்கிய சிறு கதைப் பத்திரிகை. பிரதி மாதம் வெளிவருகிறது.
தாகூரின் கதைகள் இதில் பிரத்தியேக உரிமையுடன்
வெளிவருகின்றன.

தனிப் பிரதி அணா 4. தான். :: வருஷ சந்தா ரூ. 3.

உடனே சந்தாதாரர்களாய் சேருங்கள். ஏஜண்டுகள் இல்லாத
ஊர்களில் ஏஜண்டுகள் தேவை.

கதை மலர் — பைண்ட் வால்யூம்

இது ஒரு இலக்கிய விருந்து. மூன்று தாகூர் சிறு கதைகள், ஒரு பிரேம்சந்த நவீனம்; பொறுக்குமணிகளான முப்பத்தைந்து சிறு கதைகள், இவ்வளவும் அடங்கியது. முந்நூறு பக்கங்களுக்கு மேற்கொண்டது. "கதை மலரி"ன் முதல் மூன்று மலர்களும் சேர்த்து அழகாய் பைண்ட் செய்யப்பட்டது. விலை மிக மலிவு. ரூ. 2 அனுப்பினால் வேறு எவ்வித செலவுமின்றி இந்த பைண்டு வால்யூமைப் பெறலாம்.

உடனே எழுதுங்கள்:

"கதை மலர்"

8-ஸி பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

குண்டூசி

பிரதி மாதம் வெளிவரும்

தமிழ் நாட்டின் அதிக விநியோகமுள்ள கலைப் பத்திரிகை

சந்தா விவரம்

உள் நாடு

வருஷ சந்தா	... ரூ.	6
ஆறு மாத சந்தா	... ரூ.	3
தனிப் பிரதி	அணா	8

இலங்கை

வருஷ சந்தா	...ரூ.	6
தனிப் பிரதி	சதம்	50

வெளி நாடு

வருஷ சந்தா	... ரூ.	9
தனிப் பிரதி	அணா	12

★

விளம்பர விகிதங்கள்

(ஒரு தடவைக்கு)

அட்டை

முன் பக்கம்	... ரூ,	450
கடைசி பக்கம்	ரூ.	250
2,3-ம் பக்கம்	ரூ,	150

சாதாரணப் பக்கம்

ஒரு பக்கம்	...ரூ.	75
அரைப் பக்கம்	...ரூ.	40
1/3 பக்கம்	...ரூ.	30
கால் பக்கம்	...ரூ.	25

வர்ண விளம்பரங்களுக்கு 25% அதிகம்

இந்த ஊசியில்

சுதந்திரம் வாழ்க ... தலையங்கம் 5
உள்ளது உள்ளபடி ... "ஜடாயு" 6
நடிப்பும் உண்மையும் ... க. ரா. 9
"க்யூ" வரிசை கேலிச் சித்திரம் 11
ஹொன்னப்ப பாகவதர் ஆர்ட் பக்கம் 13
கே. ஆர். செல்லம் மூவர்ணப் பக்கம் 14
கே. ஆர். செல்லம்-வாழ்க்கை வர்ணனை 15
குண்டூசியைக் கேளுங்கள் 23
செய்திப் படங்கள் 31
பொதுஜனம் பேசுகிறார் 39
முன்னெச்சரிக்கை! தமாஷ் சித்திரம் 43
துணிப் புல் "வெங்கடுக்கிணி" 44
பாகவதரின் ராஜமுக்தி விசேஷப் பேட்டி 48
கீத காந்தி ... படக் கதை 51
சினிமா ஊழியர் சம்பள விகிதம் ... 53
டி. ஆர். ராஜகுமாரி ... ஆர்ட் பக்கம் 55
பி. கண்ணாம்பா ... ஆர்ட் பக்கம் 56
இது செய்தி 59
பிரம்மலோகம் படச் செய்திகள் 66
குண்டூசி டைரி 68

கட்டுரையாளர்களுக்கு :

"குண்டூசி"க்கு கேள்விகள், நேயர்களின் அபிப்பிராயங்கள், வெளியூர் சினிமா நிகழ்ச்சிகள், சினிமா சம்பந்தமான விகடத் துணுக்குகள், சித்திரங்கள், கட்டுரைகள், கதைகள் இவையெல்லாம் வரவேற்கப்படுகின்றன. எழுதி அனுப்புபவைகளை காகிதத்தின் ஒரே பக்கத்தில் மையினால் சுத்தமாக எழுதி அனுப்ப வேண்டும். அங்கீகரிக்கப்படாதவைகளை திரும்பப் பெற விரும்புகிறவர்கள் ஸ்டாம்பு வைத்தனுப்ப வேண்டும். கட்டுரையாளர்களுடன் கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொள்ளுவது சாத்தியமில்லை.

"குண்டூசி", 246, கம்பு செட்டி தெரு, சென்னை 1

போட்டி, வெற்றி சுலபம்

ரூ. 25,000★

புதுப் போட்டி
U. 50

இந்தக் கட்டத்தில் 5 முதல் 20 வரையி லுள்ள எண்களை இடமிருந்து வலமும், மேலிருந்து கீழும், கூட்டினால் 50 வரும் படி அமைக்கவும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்கலாம்.

உங்கள் விடைகளை

முந்திய விடை
S. 42

18	12	5	7
10	4	15	13
3	9	14	16
11	17	8	6

2-9-48ந் தேதிக்குள் தபாலில் போட்டுவிடவேண்டும்

இலங்கை, வெளிநாடு நேயர்கள்மட்டும் 6-9-48க்குள் தபாலில் போடலாம்

15-9-48 ந்தேதி முதல் இரண்டு பரிசுதாரர்களுக்கு தந்தி யடிக்கப்படும். மற்றவர்களுக் கெல்லாம் பரிசு ஜாபிதா தபாலில் அனுப்பப்படும்.

நான்கு பரிசுகள்: ரூ. 12,000, 6000, 4000, 3000

மதராஸ் பாரத் பாங்கில் சீல் செய்து டிபாஸிட்டில் வைத்துள்ள விடைக்கு எண்ணுக்கு எண் கட்டத்திற்குக் கட்டம் சரியான விடைக்கு முதற்பரிசும், முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு 2-ம் பரிசும், முதல் ஒரு வரிசை மட்டும் சரியான விடைக்கு 3-ம் பரிசும், முதல் இரண்டு எண் மட்டும் சரியான விடைக்கு 4-ம் பரிசும், அளிக்கப்படும்.

மாதம் இரண்டு போட்டிகள் நடைபெறும். விவரங்கள் இனும்

பிரவேசக் கட்டணம்: 1 விடைக்கு ரூ. 1-0-0; 6 க்கு ரூ. 5-0-0 மாத்திரம்.

ஒருவரே எத்தனை விடைகள் வேண்டுமானாலும் சாதாரண காகிதத்தில் தயாரித்து அதற்குரிய கட்டணத்துடன் அனுப்பலாம். உங்கள் விடைகளுடன் மணியார்டர் ரசிதையும், பரிசு ஜாபிதாவுக்காக உங்கள் விலாஸமிட்ட ஒரு தபால் கவரையும் சேர்த்தனுப்பவேண்டும்.

★ குறிப்பு: மேலே குறிப்பிட்ட நிகர வசூல் ரூ. 25,000 க்குக் குறைந்தால் பரிசுகளின் தொகையும் அதற்கேற்றாற்போல் குறைத்து பகிர்ந்து அளிக்கப்படும். எல்லா விஷயங்களிலும் எங்கள் தீர்ப்பே முடிவானது; சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும். போட்டியில் கலந்து கொள்பவர்கள் இதை ஒப்புக்கொண்டே கலந்துகொள்வதாகக் கருதப்படும். மற்ற விதிகள் வழக்கம்போல்.

லக் & கோ., Firm No. 1564 (Govt. Regd.) 43/23, ஈஸ்வரன் தெரு, **சென்னை 17.**

பட்டை 1
ஊசி 11

குண்டூசி

ஆகஸ்டு
1948

ஆசிரியர்
பி.ஆர்.எஸ்.கோபால்

வாழ்க சுதந்திரம்!

வாழ்க சுதந்திரம்! வாழ்க சுதந்திர இந்தியா! இந்தியா சுதந்திரம் பெற்று, நாம் ஒரு வருஷ காலம் சுதந்திர மக்களாக வாழ்ந்து விட்டோம். இந்த ஒரு வருஷ காலத்தில் நேருஜீ மந்திரி சபையினர் பல அசாதாரண கஷ்டங்களையும் உலகோர் வியக்கும்படி சமாளித்து, இந்தியாவின் கௌரவத்தை பன்மடங்கு பெருக்கியிருக்கின்றனர்.

சினிமாத் தொழில் பிரசாரத்திற்கு மிகப் பயன்படக் கூடிய ஓர் இணையற்ற சாதனம் என்ற கொள்கையை அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பது பாராட்டத் தக்க விஷயமாகும். இந்திய சர்க்கார் சினிமா விஷயமாகவும் அநேக சீர்திருத்தங்களைச் செய்து, இத் தொழிலை வளரச் செய்வதற்கான திட்டங்களை ஆலோசித்து வருகின்றனர். நேருஜி சர்க்காரின் கீழ் சினிமாத் தொழில் மிகுந்த ஆதரவு பெற்று முன்னேற்றம் அடையும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

ஆனால், சினிமாத் தொழிலில் ஈடுபட்ட சிலர் கேட்கலாம்: "இந்தியா சுதந்திரம் அடைந்து விட்டதே, இந்த ஒரு வருஷ காலத்திற்குள் இந்திய சர்க்கார் சினிமாத் தொழிலுக்கு பிரமாதமாக என்ன நன்மையைச்செய்து விட்டார்கள் ?" என்று.

இந்திய சர்க்காருக்கு எவ்வளவோ தொல்லைகள். இவை போதாவென்று காஷ்மீரில் எதிரிகள் காலடி வைத்து ஓயாது தொல்லை கொடுத்துவருகின்றனர். ஹைதராபாத்திலோ எப்பேர்ப்பட்டவர்களும் பொறுமை இழக்கக்கூடிய காரியங்கள் நடந்துவருகின்றன. இவற்றையெல்லாம் தான் இந்திய சர்க்கார் முதலில் கவனிக்கவேண்டும் என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். ஆகவே, இத்தகைய தொல்லைகளிடையே கூட இந்திய சர்க்கார் சினிமாத் தொழிலைப் பற்றியும் ஆலோசித்து வருவதற்காக எம் நன்றி உரித்தாகும்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு நம் பட முதலாளிகள் ஒரு பிரதிக்ஞையை மேற் கொள்ளலாம். அதாவது, இனி திரும்பத் திரும்ப புராணப் படங்களையே எடுத்துக் கொண்டிராமல், தேச முன்னேற்றத்திற்கான படங்களைத் தயாரிக்க முற்பட்டார்களானால் அதுவே ஒரு பெரிய தேசத் தொண்டாயிருக்கும்.

இந்த மாதம் 15-ந் தேதியன்று நாம் முதல் இந்திய சுதந்திர தினத்தை சென்னை மாகாணம் பூராவும் — இந்தியா பூராவும் — அதிவிமரிசையாய் கொண்டாடி விட்டோம். பல அன்பர்களும் ஆதரவாளர்களும் நமக்கு சுதந்திர தின வாழ்த்துக்களை அனுப்பியிருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் இதன் மூலம் எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

உள்ளது உள்ளபடி

எனக்கு சில சமயங்களில் சென்னை மக்கள்மீதும் சென்னை சர்க்கார்மீதும் ரொம்பரொம்ப கோபம் வருவதுண்டு. எந்த ஒரு விஷயத்திலும் உள்ள குறைகளும், அதை நிவர்த்தித்து அபிவிருத்தி செய்வதற்கான வழிகளும், நம்மவர்களுக்கு மற்றவர்களுக்கு முன்னதாகத் தெரியவே செய்கிறது. அதுவும் சினிமா உலகில் உள்ள குறைகளெல்லாம் பத்திரிகைகளாலும், பத்திரிகை வாசகர்களாலும் அலசிப் பிழிந்து காட்டப்படுகின்றன. ஆனால் அவற்றையெல்லாம் அநேகமாக யார் கவனிக்கிறார்கள்? சினிமா உலகம் அதையெல்லாம் லக்ஷியம் செய்யாது, திட்டம் கட்டுப்பாடு இன்றி தன் போக்கே போய் பாழடைந்து கொண்டு வருகிறது.

உதாரணமாக, "சினிமாத் தொழிலுக்கு சர்க்கார் ஒத்துழைப்பு அவசியம்; அவர்களுடைய ஒத்துழைப்பு இருக்குமானால் இத்தொழில் மிக விரும்பக்கூடிய மிகப் பயன்படக் கூடிய தொழிலாகிவிடும்" என்ற யோசனையை பலர் பல வருஷங்களாகச் சொல்லி வந்தது யார் காதிலும் விழவில்லை. ஆனால் சென்ற மாதம் வங்க சர்க்கார் சினிமாத் தொழில் நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ளுவதென்று இந்தியாவிலேயே முதன் முதலாக தீர்மானித்தது எங்கும் பரபரப்பை உண்டுபண்ணி யிருக்கிறது. இந்த மாதமோ "முதல் பெருமையை" அளிக்க வேண்டிய ஒரு நல்ல சீர்திருத்தத்தைப் பம்பாய் செய்திருக்கிறது.

புகை பிடிக்காதே!

பீடி, சிகரெட் முதலியவற்றைப் பிடிக்கும் வழக்கம் நல்லதல்ல. ஆனால் தனிப்பட்ட நபர்கள் தங்கள் தேக சுகத்தை புகை பிடித்துக் கெடுத்துக் கொள்ள விரும்பினால் அதில் தலையிட சர்க்காருக்கு உரிமை யில்லைதான். ஆனால் ஒருவர் புகை பிடிப்பது மற்றவர்களின் தேக நலத்தைப் பாதிப்பதாயிருந்தால் சர்க்கார் தலையிடுவது நியாயந்தானே? இந்தக் கொள்கைப்படி பம்பாய் போலீஸ் கமிஷனர் அந்த நகர தியேட்டர்களில் புகை பிடிக்கக் கூடாது என்று ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்.

சென்னை நகரத்தில் பஸ்களில் புகை பிடிக்கக் கூடாது என்று போலீஸார் தடுத்திருக்கின்றனர். ஆனால் அது அபாயத்தைத் தடுக்கும் நோக்கத்துடன் செய்யப்படுகிறது. "டிராம்களில் வால் பக்கத்தில் நின்று கொண்டு மட்டும் தான் புகை பிடிக்கலாம்" என்று விதி கூறுவதாக ஞாபகம். ஆனால் இந்த விதி சரிவர வற்புறுத்தப் படவில்லை. ரயில்களிலோ இந்தக் கட்டுப்பாடே கிடையாது. புகை பிடிக்கும் அன்பர் ஒருவர் புகைக்க ஆரம்பித்து விட்டால் அந்தப் பழக்க மில்லாதவர்கள் பாடு திண்டாட்டமாகி விடுகிறது; சில நிமிஷங்களில் அவர்களுக்கு இருமலும் ஆரம்பமாகிவிடுகிறது. காற்றோட்டமுள்ளதான பஸ்கள், டிராம்கள், ரயில்களிலேயே விஷயம் இப்படி என்றால் கதவுகளை யெல்லாம் மூடிவிட்டுப் படம் காட்டும் தியேட்டர்களுக்குள் புகை பிடிப்பது மற்றவர்களுக்கு எவ்வளவு கஷ்டத்தையும், சுகக் கேட்டையும் உண்டுபண்ணும் என்று விவரிக்க வேண்டியதில்லை. ஆகவே பம்பாய் கமிஷனர் பிறப்பித்திருக்கும் உத்தரவு மிகமிக நியாயமானது; அத்தியாவசியமானது என்று கருதுகிறேன். வெகுநாளாய்க் குறையாயிருந்து வரும் இதைச் சென்னை போலீஸ் கமிஷனரும் ஏன் நீக்கி வைக்க முன்வரக் கூடாது?

கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது!

சமீபத்தில் சில சென்னை ஸ்டுடியோ ஊழியர்கள் தங்கள் சம்பளம், ரஜா முதலிய விஷயங்கள் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும் என்பதற்காக வேலை நிறுத்தம் செய்தார்களல்லவா? அதன் விளைவு "கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட" கதையாகி விட்டது. ஸ்டுடியோ ஊழியர்களில் இன்னின்னாருக்கு இன்னின்ன சம்பளம் தரப்பட வேண்டும் என்று தொழில் கமிஷனர் சமீபத்தில் ஒரு சிபாரிசை வெளியிட்டிருக்கிறார். (இது விவரமாக வேறொரு பக்கத்தில் தரப்பட்டிருக்-

கிறது.) இந்த சிபாரிசில் கூறப்பட்டிருக்கும் சம்பள விகிதங்களுக்கும், ஸ்டுடியோக்களில் தரப்பட்டு வரும் சம்பளங்களுக்கும் சம்பந்தா சம்பந்தமின்றி உள்ளது. சில இனத் தொழிலாளர்களுக்கு அதிகச் சம்பளமும், கேமிராமென், ஸௌண்ட் என்ஜினியர் போன்ற பெரிய டெக்னிஷியன்களுக்கு மிக மிகக் குறைவான சம்பளங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், அல்லது இத்தொழில் சம்பந்தமான சங்கங்கள் இவைகளை முன்னதாகவே கலந்து கொண்டு, நிலைமையைக் கவனித்து அதற்கேற்றபடி இத்தீர்ப்பு வழங்கப்படாதது வருத்தத்தை அளிக்கிறது. சாதாரணமாக, தொழில் தகராறுகளில் அளிக்கப்படும் தீர்ப்புகளில் சம்பள விகிதங்கள் உள்ளதற்கு அதிகமாக இருப்பதே வழக்கம். ஆனால் சினிமாத் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் தீர்ப்பிலோ உள்ள சம்பளத்தையும் குறைக்கப்படுவது விசித்திரமாயிருக்கிறது.

டெக்னிஷயன்கள் ஆட்சேபனை.

சென்னை ஸினி டெக்னிஷ்யன்களின் சங்கம் சென்ற சில வருஷகாலமாக மிகப் பாராட்டத்தக்க முறையில் நடத்து வருகிறது. அதன் நடவடிக்கைகளோ உன்னத நோக்கம் கொண்டவையாயிருக்கின்றன. இத்தகைய ஒரு முக்கிய சங்கத்திடம் தீர்ப்பளிக்குமுன் தொழில் கமிஷனர் ஆலோசனை கேட்காதது வருந்தத்தக்கது. இதுபற்றித் தங்கள் அதிருப்தியையும் ஆட்சேபனையையும் ஸினி டெக்னிஷ்யன்கள் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர். தொழில் கமிஷனர் இதன் பின்னராவது ஸ்டுடியோக்களில் ஊழியம் செய்பவர்களையும், முதலாளிகளையும் கலந்து கொண்டு, தற்போதைய நிலைமைக்கேற்றபடி தம் சிபாரிசை தொழில் கமிஷனர் மாற்றுவார் என்று நம்புகிறேன்.

நக்ஷத்திரங்கள்மட்டும் உயர்வோ?

ஸ்டுடியோ ஊழியர்களுக்கெல்லாம் சம்

பம்பாய் சர்க்கா"ரைப் பின்பற்றி சென்னை சர்க்காரும் "தியேட்டர்களுக்குள் புகை பிடிக்கக்கூடாதெ"ன்று சட்டம் இயற்றினால், புகை பிடிப்பவர்கள் 'ஒருவேளை இப்படி வஞ்சம் தீர்த்துக்கொள்ள முற்படலாம்!

ஆண்டு மலர் இனாம்!

நம் "குண்டூசி"யின் முதல் ஆண்டு மலர் அக்டோபர் மாதத்தில் வெளிவரும். கண்ணைக் கவரும் முறையில் தயாராகி வரும் இம் மலரை நீங்கள் இனாமாகப் பெற விரும்புகிறீர்களா?

— எனின் —

15-10-48ந் தேதிக்குள் ஒரு வருஷ சந்தாத் தொகை (ரூ. 6)யை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

ஏற்கனவேயே ஒரு வருஷத்திற்கு சந்தாதாரராய் சேர்ந்துள்ளவர்களுக்கும் இந்த ஆண்டு மலர் இனாமாகவே அனுப்பப்படும். ஏற்கனவே ஆறு மாத சந்தாதாரர்களாய் சேர்ந்திருப்பவர்கள் மற்றும் 6 மாத சந்தாவை 15-10-48க்குள் அனுப்பி வைத்தால் அவர்களுக்கும் மலர் இனாமாய் அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர்

"குண்டூசி" காரியாலயம்

246, தம்புச் செட்டித் தெரு,

சென்னை-1.

பள விகிதங்கள் நிர்ணயிக்கப்படுகின்றனவே. ஆனால் சினிமா நக்ஷத்திரங்களின் சம்பளங்களைப் பற்றிய பேச்சே காணோம். நியாயமாகப் பார்த்தால் அவர்களுக்குக் குறைந்த சம்பள விகிதத்தை நிர்ணயித்தால் சினிமாத் தொழிலின் பல அம்சங்களும் முன்னேறும். ஒரு வருஷம் பூராவுக்கும், ஒரு ஸ்டுடியோ ஊழியர்கள் அனைவருக்கும் கொடுக்கப்படும் அத்தனை சம்பளத்தையும் ஒரு நக்ஷத்திரம் ஒரே படத்திற்கு வாங்கி விடுகிறாரல்லவா? நக்ஷத்திரங்களின் சம்பளங்களைக் குறைப்பதற்கு தொழில் கமிஷனர் தீர்ப்பளிப்பது சாத்தியமில்லை. முடியவும் முடியாது. ஆதலால் இதைச் சாதித்துக் கொள்ளுவது படமுதலாளிகளின் கட்டுப்பாடான ஒத்துழைப்பிலேயே இருக்கிறது. ஆனால் 'இந்த ஒத்துழைப்பு மட்டுமிருந்தால் இதற்கு முன்பே இத்தொழில் எவ்வளவோவகையில் முன்னேறியிருக்குமே?' என்று கேட்கிறீர்களோ? இது நியாமான கேள்விதான்.

தியேட்டர் கட்டக்கூடாது

சமீபத்தில், டொமினியன் பார்லிமென்டில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு ஸ்ரீ. என். வி. காட்கில் பதிலளிக்கையில், பண்டித நேரு குறுக்கிட்டு, "குடியிருப்பு வீடுகளுக்கான தேவை பூர்த்தியாகும் வரையில் இந்தியா வெங்கிலுமே சினிமா தியேட்டர் கட்ட அநுமதிக்கப்பட மாட்டாது" என்று தெரிவித்தாராம். இதன் பின்னர் இந்த விஷயம் வங்க சட்டசபையிலும் எழுந்திருக்கிறது. கல்கத்தா நகரத்தில் தற்போது கட்டப்பட்டுவரும் 18 புதிய தியேட்டர்களுக்கு சர்க்கார் உதவாம லிருக்கும்போது எவ்விதம் கட்டட சாமான்கள் கிடைத்தன என்று அந்த சர்க்கார் விசாரித்து வருகிறதாம்.

ஹானி விளையும்

நானும் ஒரு தேசியவாதிதான். தேச நலத்திற்குத்தான் நான் பிரதான ஆதரவளிப்பேன். "ஒருவனுக்கு உணவும், வீடுமே முதல் அவசியம்" என்பதையும் நான் மறுக்கவில்லை, ஆனால் நான் சினிமா உலகத்தின் கஷ்ட நிஷ்டூரங்களையும் மறப்பதற்கில்லை. இந்திய சர்க்காரின் இத்தீர்மானம் படத்தொழிலை மிகவும் பாதிக்கும். புதிய தியேட்டர்களைக் கட்டவே கூடாது என்று அடியோடு தடை விதிப்பதற்குப் பதில், "அவசியமானபோது, அவசியமான ஊர்களில் மட்டும் கட்டலாம்" என்று தீர்மானத்தை மாற்ற வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

நடிப்பும் உண்மையும்

கு.ரா.

நானும், என் தந்தையும் அன்று ஒரு பிரபல ஆங்கில சினிமாவுக்குப் போய் விட்டுவீட்டுக்குத் திரும்பிவந்து கொண்டிருந்தோம். படம் மிகவும் பிரமாதமாக இருந்தது. கூட்டமும் அதிகமாகத்தான் இருந்தது.

போகும் வழியில் எல்லோரும் அந்தப் படத்தைப் பற்றியே பேசிக் கொண்டு போனார்கள்.

“ரோனல்ட் கால்மன் நடிக்கவேயில்லை. அந்தக் கதாபாத்திரமாகவே மாறி விட்டார்!” என்றார் ஒருவர்.

“கொன்னுப் புட்டான், ஸார்! நடிப்பாவது நடிப்பு. பிரமாதம்!” என்றார் இன்னொருவர்.

நானும், என் தந்தையும் மட்டும் மௌனமாக நடந்து கொண்டே, பிறர் சொல்லிக் கொண்டு போனதைக் கேட்டுக் கொண்டிருந்தோம். என் மனதில் படத்தைப் பற்றிச் சில சந்தேகங்கள் ஊசலாடிக் கொண்டிருந்தன.

சிறிது தூரம் நடந்ததும் என் தந்தையிடம் என் சந்தேகத்தை வெளியிட்டேன். “ஏனப்பா, நடிக்க வந்தவன் நிஜமாகவே எப்படி ஒருவனைக் கொன்று விட முடியும்? கொல்வதாக பாவனை செய்ய வேண்டியவன் நிஜமாகவே கொன்று விடுவது எப்படி சாத்தியம்?” என்று கேட்டேன்.

நாங்கள் பார்த்த படத்தில் கதாநாயகன் ஒரு நாடகத்தில் நடித்து வருகிறான். வெகு காலம் தொடர்ந்து நடக்கும் அந்த நாடகம் காரணமாகக் கதாநாயகன் அந்த நாடகபாத்திரமாக மாறி, ஒரு நிஜக் கொலையைச் செய்து விடுகிறான். அது சாத்தியம்தானா என்பதுதான் என் சந்தேகம்.

என் தந்தை இலேசாகச் சிரித்தார்.

“நீ குப்பையா கம்பெனி என்று கேள்விப் பட்டிருக்கிறாயா?” என்று என்னைப் பார்த்துக் கேட்டார்.

“ஏதோ கேட்டதாக ஞாபகம். ஆனால் ரொம்ப வருஷங்களாயிற்று, இல்லையா?” என்றேன் நான்.

“ஆமாம்! அந்தக் கம்பெனி மறைந்து நாற்பது வருஷங்களாகி விட்டன. அது இருந்த வரை எந்தக் கம்பெனியும் நாடகம் போடத் துணிந்ததில்லை. அப்படியே போட்டாலும் ‘பிரகலாதா’ மட்டும் நடத்த மாட்டார்கள்” என்று கூறி நிறுத்தினார்.

பிறகு, “உனக்கு இன்னொரு விஷயம் தெரிந்திருக்குமே. இப்பொழுது கூட எங்கேயாவது ‘பிரகலாதா’ நாடகம் போட்டால் கடைசி காட்சியை மட்டும் சரியாகக் காட்ட மாட்டார்கள். யாருக்காவது தெய்வம் வந்து விடும் என்று பயப்படுவார்கள்” என்றார்.

“அது ஒரு மூடப் பழக்கம். தெய்வமாவது வரவாவது! மேடை மீது நடக்கும் கூத்தைப் பார்த்து யாராவது பயப்படுவார்களா?” என்று கூறிச் சிரித்தேன்.

“அப்படி ஒரேயடியாகச் சொல்லி விடாதே. தெய்வம் வராது என்று கண்டிப்பாகச் சொல்ல முடியாது. நான் சொன்ன குப்பையா கம்பெனி மறைந்து போனதற்கே அதுதான் காரணம், தெ[illegible]யுமா?” என்றார் என் த[illegible]

"அது சரி; நான் கேட்ட சந்தேகத்திற்குப் பதிலளிக்கவில்லையே?" என்றேன்.

"நான் இப்பொழுது சொன்ன எல்லா விஷயங்களும் ஒரே சமயத்தில் நடந்தவைதான். விவரமாகவே சொல்லி விடுகிறேன். பிறகு ஒவ்வொன்றுக்கும் சம்பந்தப்படுத்திப் பார்த்துக் கொள்" என்று கூறினார்.

அதற்குள் வீடு வந்து விட்டது.

மொட்டை மாடியில் கட்டிலில் உட்கார்ந்து கொண்டோம். என் தந்தை பழைய வரலாறு ஒன்றை விரிவாக எனக்குச் சொன்னார்.

* * *

குப்பய்யா கம்பெனி சென்ற ஊர்களிலெல்லாம் அவர்களுடைய ஜெயக் கொடி பறந்தது. கம்பெனி ஊருக்கு வருவதற்கு முன் இன்னொரு ஊரில் அவர்கள் செய்து வரும் அதிசயங்களைப் பற்றி ஜனங்கள் பேசினார்கள். கம்பெனி வந்து ஊரில் தங்கி இருந்த வரை அதைப் பற்றிய பேச்சாகவேயிருந்தது. வந்து விட்டுப் போன பல காலத்திற்குப் பிறகும், "அந்தக் கம்பெனியைப் போல உண்டா"..."'ராமாயணம்' நூறு நாள் நடத்தினார்கள்..." என்றெல்லாம் பேசிக் கொள்வார்கள்.

குப்பய்யர கம்பெனியின் புகழுக்கு தனிப்பட்ட நபரைக் காரணம் காட்டுவது சிரமம். கம்பெனி நடிகர்கள் யாவரும் ஒருமிக்க நன்றாக நடித்து வந்தார்கள். நடிப்பு என்ன? அந்த அந்த கதா பாத்திரமாகவே மாறி விடுவார்கள். ஏசுநாதர் வேஷம் போடும் நடிகர் ஏசுநாதராகவே மாறி விடுவார். அதே போல்தான் மற்ற நடிகர்களும். பிறகு புகழுக்குக் கேட்க வேண்டுமா?

இருந்தாலும் கம்பெனியில் முருகய்யனுக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. அநேகமாக எல்லா நாடகங்களிலும் அவன்தான் கதாநாயகனாக நடித்து வந்தான். சிறந்த நடிகன்; ஹாஸ்யம் நிறைந்தவன்.

யாராவது அவனுடைய பெயரைக் கேட்டால், "எந்தப் பெயர் வேண்டும்?...எனக்கு எத்தனையோ பெயர்கள். ராமன், ஹரிச்சந்திரன், புலந்திரன், நளன்...எந்தப் பெயராவது கூப்பிடுங்கள்" என்று சொல்வான்.

பொது ஜனங்களும் அந்த அந்த கங்கள் நடக்கும்போது முருகய்யன் நடித்த கதா பாத்திரத்தின் பெயராலேயே அவனை அழைப்பது வழக்கமாகி விட்டது. "அதோ ராமர் போகிறார்" என்பார்கள். குப்பய்யா கம்பெனியில் அப்போது "ராமாயணம்" நடக்கிறதென்று தெரிந்து கொள்ளலாம்.

கம்பெனி மானேஜரும் முதலாளியுமான சுந்தரராஜ முதலியாருக்கும், முருகய்யாவுக்கும் மிகவும் அந்நியோன்னியமான நட்பு இருந்தது. கம்பெனியின் பிரதான நடிகனாக இருந்ததோடு, முருகய்யன் முதலியாரின் மாப்பிள்ளையாகவும் இருந்தான். ஆயினும் துரதிருஷ்டவசமாக அவனுடைய மனைவி கல்யாணமான மூன்றாவது வருஷமே இறந்து விட்டாள். முருகய்யன் அவள் மேல் வைத்திருந்த அன்பினால் வேறு கல்யாணமே செய்து கொள்ளவில்லை. மாமனாருடன்—அவரும் வேறு உறவு மனிதர்கள் இல்லாதவர்—சேர்ந்து நாடகக் கம்பெனியே கதியாக இருந்து வந்தான். அந்த இரண்டு பேரும் வைத்ததுதான் 'குப்பயயா கம்பெனி'யில் சட்டமாக இருந்தது!—இருவரினும் முருகய்யாவின் குரல்தான் இளமையின் முறுக்கோடு கூடி ஓங்கியிருந்தது.

... இப்படிப்பட்ட கம்பெனி கடைசியில் இருந்த இடம் தெரியாமல் போகும்படியான சம்பவம் ஒன்று நடந்தது.

2

முருகய்யனுக்கும் கம்பெனி முதலாளிக்கும் பெரிய விவாதம் நடந்து கொண்டிருந்தது.

"...அது எப்படி நீங்கள் என்னை விட்டு விட்டு இன்னொருவனுக்கு அந்த வேஷத்தைக் கொடுக்கலாம்" என்று முருகய்யன் பட படப்போடு சொல்லிக் கொண்டிருந்தான்.

"இதோ பார், முருகய்யா. இதுவோ புது நாடகம். எத்தனை நாள் நடக்கப் போகிறதோ, யாருக்குத் தெரியும். ஜனங்களுக்குப் பிடிக்குமோ, பிடிக்காதோ? இது முடிந்து விட்டால் பிறகு உன் ராஜ்யம்தான்...நீயும்தான் ஓய்வே யில்லாமல் நடித்துக் கொண்டிருக்கிறாய்..." என்றார் முதலியார்.

குப்பய்யா கம்பெனியார் "பிரகலாதா" நாடகம் போட முடிவு செய்திருந்தார்கள். அந்த நாடகத்தில் இரணிய கசிபுவின் வேஷத்தை முருகய்யனுக்குக் கொடுக்காமல் வேறு ஒரு நடிகனுக்கு முதலியார் கொடுத்திருந்தார். அதைக் குறித்துத் தான் முருகய்யனுக்கும், முதலியாருக்கும் வாக்கு வாதம்


10 AS
கியூ வரிசை

நடந்தது. கடைசியில் முருகய்யனை ஒரு வழியாகச் சமாதானப் படுத்தினர் முதலாளி முதலியார்.

முருகய்யன் அன்று இரவெல்லாம் அதைப்பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான். "............இவ்வளவு நாள் கதா நாயகனுகவும், முக்கிய பாத்திரங்களாகவும் நடித்து விட்டு, இப்பொழுது மட்டும் நரசிம்மராக நடிக்கிறதாவது? ....ஒரு பேச்சா, ஒரு பாட்டா? மேடையில் ஐந்து நிமிஷ வேலை கூட இல்லாமல் என்ன பெயர் வாங்குவது.........?" என்றெல்லாம்அவன் மனது எண்ணமிட்டது.

ஒரு கணம், "இன்னும் நாலைந்து நாளைக்குத்தானே இப்படி?.......அதற்கு மேல்' பிரகலாதா' எங்கே நடக்கப் போகிறது? முதலியாரைப் போலவே பொதுஜனங்களும் தவறு செய்வார்களா? முருகய்யன் கதா நாயகனுக இல்லாத நாடகத்தை அவர்கள் பார்ப்பார்களா?" என்றெண்ணிக் குதூகலமடைந்தான்.

ஆயினும் புது நடிகனுன கிருஷ்ணசாமியின் நடிப்பைப் பார்க்கும் போதெல்லாம் பழைய எண்ணங்கள் மறுபடியும் மறுபடியும் வந்து விடும்.

கடைசியில் "பிரகலாதா" நாடகம் ஆரம்பமாயிற்று. குப்பய்யா கம்பெனியின் புது நாடகம் என்ற முறையில் கொட்டகையில் ஏராளமான கூட்டம் கூடியிருந்தது. உள்ளூரில் பெரிய பிரமுகர் ஒருவர் ஆரம்ப விழாவுக்குத் தலைமை வகித்தார்.

நாடகம் கடைசி வரை பிரமாதமாக இருந்தது. ஜனங்கள் அனேகம் தடவைகளில் கரகோஷம் செய்தார்கள். வழக்கம் போல் எல்லோரும் நன்ருக நடித்தார்கள். காட்சி ஜோடனைகளும் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டிருந்தன.

நரசிம்மராக நடித்த முருகய்யன் உண்மை நரசிம்மராகவே மாறிவிட்டான். கிருஷ்ணசாமியின் பேரிலும், முதலியாரின் பேரிலும தனக்கிருந்த கோபத்தை நடிப்பில்புகுத்தியிருந்தான்.

ஆகவே நாடகம் வெற்றிகரமாக முடிந்தது.

விழாவின் தலைவர் நாடகத்தை மிகவும் புகழ்ந்து பேசினர். "......இரணிய கசிபுவாக புது நடிகர் நடிக்கிருர் என்ருலும், அவருடைய நடிப்பு என்னைக் கவர்ந்து விட்டது. இரணிய கசிபுவே வந்து நடிப்பது போல் இருந்தது......... இந்த நாடகம் இன்னும் வெகு காலம் நடந்து பொது ஜனங்களின் புகழுக்குப் பாத்திரமாகும் என்று நம்புகிறேன்" என்று முடித்தார்.

கரகோஷம் வானைப் பிளக்கும்படி இருந்தது. தலைவரின் பேச்சைக் கேட்டுக் கரகோஷம் செய்யும் வரை கொட்டகையிலிருந்து ஒருவரும் எழுந்திருக்கவில்லை.

"கம்பெனியின் வேறு எந்த நாடகத்தின் ஆரம்பவிழாவும் இவ்வளவு வெற்றிகரமாக அமையவில்லை" என்று முதலியார் வந்தனேபசாரத்தில் கூறினர்.

3

"வெற்றிகரமான பத்தாவது வாரம்!"

"குதூகலமான இருபதாவது வாரம்!"

".........வெள்ளி விழா வாரம்!"

குப்பய்யா கம்பெனியின் "பிரகலாதா" நிற்காமல் நடந்து கொண்டேயிருந்தது. கூட்டமோ நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம் திரள் திரளாக ஜனங்கள் வந்து நாடகத்தைப் பார்த்தார்கள்.

கம்பெனியில் வேறு நாடகம் போட வேண்டிய அவசியமே யில்லாமல் போய் விடுமோ என்று முதலியார் சந்தேகப் பட்டார். முருகய்யனைப் பற்றி அவர் பெரிதும் விசாரப் பட்டார்.

அவன் மனதில் நாளுக்கு நாள் பொறுமைத் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. ஆயினும் தன் மனதிலிருந்ததை அவன் வேறு யாரிடமும் வெளிப்படுத்த வில்லை. எப்பொழுதும் தன் அறையில் உட்கார்ந்து கொண்டு உள்ளுக்குள்ளேயே புழுங்கிக் கொண்டிருப்பான. மற்றவர்களுடன் பேசுவதையே விட்டு விட்டான். சாப்பிடும் போது கூட, போட்டதைச் சாப்பிட்டு விட்டு எழுந்து போய் விடுவான்.

சில நாட்களில் நாடகம் முடிந்தவுடன் வேஷத்தைக் கூடக் கலைக்காமல் நேரே தன் அறைக்குப் போய்விடுவான். இந்த ஐந்தாறு மாதங்களில் அவனது முகபாவமே மாறிப் போய் விட்டது. சதா சிரிப்புத் தவழும் அவன் முகத்தில் குரூரத் தன்மை படர்ந்திருந்தது. நரசிம்மராகவே மாறி விட்டான் அவன்.

முதலியார் எத்தனையோ நாட்களில் அவனைச் சமாதானப் படுத்திப் பேச

[தொடர்ச்சி 57-ம் பக்கம் பார்க்க]

ஆர். கே. எஸ். பிக்சர்ஸின் "தேவ மனோகரி" தமிழ்ப் படத்தில் ஹொன்னப்ப பாகவதரின் வேஷமும், நடிப்பும் நன்கு பொருந்தி யிருக்குமாம்.

கே. ஆர். செல்லம்

கே. ஆர். செல்வம்

வாழ்க்கை வர்ணனை

"ஆள் பாதி ஆடை பாதி" என்று ஒரு வசனம் உண்டு. இந்தப் பழைய வசனம் புதிய காலத்தில் தோன்றியிருக்கும் சினிமாவுக்கு கொஞ்சமும் பொருந்தாது. "ஆள் வீசம்; ஆடம்பரம் முக்காலே மூன்று வீசம்" என்பதுதான் சினிமாவுக்குப் பொருத்தமான வசனமாகும்.

கண்ணைப் பறிக்கும்படியான — மடிப்புக் கலையாத 'ஸூட்'டையும், அதிஅழகான 'ஹாட்'டையும் மாட்டிக் கொண்டு, அந்த ஆடை அலங்காரத்திற்குச் சற்றும் குறைவில்லாதபடி சினிமா விஷயங்களைப் பற்றி சவடாலாகப் பேசும் ஒருவர் உங்கள் முன் தோன்றினால் அவரைப் பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்? "இவர் பிரபல டைரெக்டர் கே சுப்ரமண்யமோ? அல்லது திறமை மிக்க கேமிராமென் ராம்நாத்தோ?" என்று சந்தேகங் கொள்ளுவீர்கள். ஆனால் உண்மையை விசாரிக்கப் போனால், அவர் ஒரு 'பாடாவதி' டைரெக்டரின் உதவி டைரெக்டருக்கு உதவி டைரெக்டராகவோ, அல்லது ஒரு சொத்தைக் கேமிராமென்னிடம் கேமிரா துடைக்கும் அஸிஸ்டென்டாகவோ, அல்லது ஏதேனும் ஒரு பில்ம் கம்பெனியில் குறிப்பிட்ட வேலை எதுவும் இல்லாமல் சுற்றித் திரியும் 'சோம்பேறி முத்தனா'கவோ இருப்பார்!

இந்த "எக்ஸ்ட்ரா" நடிகைகளைத்தான் சொல்லுங்களேன். அடேயப்பா! அவர்களுடைய பேச்சும், தளுக்கும், மினுக்கும், அலங்காரமும், பளபளப்பான போல்டுகோல்டு நகைகளும் பார்ப்பவர்களைத் தலை கிறுக்கச் செய்யும். "இவர் ராஜகுமாரியாகவோ, கண்ணம்பாவாகவோ, காஞ்சனமாலாவாகவோதான் இருக்கவேண்டும்" என்றெல்லாம் சந்தேகம்

சசிதாஸ்

ஏற்பட்டுவிடும். ஆனால் உண்மையில் அவள் படங்களில் சம்பாஷணை பேசும் வாய்ப்புக்குள்படாத ஒரு 'பேசா மடந்தை'யாக இருப்பாள்!

ஆனால் இதற்கு விதிவிலக்கானவர் கே. ஆர் செல்வம். வெளிவேஷத்தை அவர் வெறுக்கிறார். விளம்பரம் செய்து கொள்ள வேண்டுமென்ற ஆவலே அவருக்குக் கிடையாது. தாம் நடித்த படங்களிலிருந்து 'ஸ்டில்' போட்டோக்களை ஒரு 'ஆல்ப'த்தில் ஒட்டி வைத்துக் கொள்ள வேண்டுமென்ற அற்ப ஆசைகூட அவருக்குக் கிடையாது. (இந்த வாழ்க்கை வர்ணனையில் வெளி வந்திருக்கும் 'ஸ்டில்'களெல்லாம் என் கைவசம் இருந்தவையே!) ஆடம்பரங்களைச் செய்து அதன் மூலம் தம் அந்தஸ்தை உயர்ந்ததாகக் காட்டிக் கொள்ள அவர் மனம் சம்மதிக்கவில்லையாம்.

"எனக்கு எந்த வேஷத்தைக் கொடுத்தாலும் நடிக்கத் தயார். எந்த வேஷத்தையும் வெற்றிகரமாய் நடிப்பேன் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு. நன்றாக நடித்தால் பத்திரிகைகள் தாமாகப் புகழ்ந்தெழுதுவார்கள். பட முதலாளிகள் தாமாக எனக்கு மேன் மேலும் சந்தர்ப்பம் அளிப்பார்கள்" என்று செல்லம் கூறுகிறார்.

தற்போதைய சினிமா உலக நிலைமையில் இதைச் சரியான கொள்கை என்று ஒப்புக் கொள்ளவதற்கில்லை.

ஒருவர் சினிமாவில் முன்னணிக்கு வருவதற்கு, நடிக்கும்போது வேஷம் போடுவது மட்டும் போதாது; அதைப் போல ஆயிரம் மடங்கு வெளி வேஷமும்போட வேண்டியிருக்கிறது.

இந்தக் காலத்தில் பித்தான் கல்லை பிரமாதமான விளம்பரத்தின் மூலம் மாணிக்கமென்று விற்றுவிட முடியும். ஆனால் அசல் மாணிக்கத்தை குப்பையிலிருந்து எடுத்துக் கொடுத்து, ஆயிரம் சத்தியம் செய்தாலும் அதை மாணிக்கமென்று யாரும் நம்பமாட்டார்கள்.

"குப்பையில் கிடந்தாலும் மாணிக்கம் மாணிக்கமே" என்ற மூதோர் மொழியை மனதில் வைத்துக் கொண்டு ஒரு நடிகரோ நடிகையோ வெளி வேஷத்தை வெறுப்பாரானால்—தானே புகழும் பணமும் தம்மைத் தேடி வரும் என்று நம்பியிருப்பாரானால்—அவர் ஏமாற வேண்டியதே. தெரிந்தோ தெரியாமலோ இக்கொள்கைப்படி நடந்து கொண்ட அனேகர் சினிமா உலகில் புகழ் பெற முடியால் மறைந்திருக்கின்றனர். ஆனால் விதிவிலக்கான கொள்கையுடைய செல்லம் சினிமாவிலிருந்து விரைவில் வெளியே

ற்றப் படாததும்

பாலயோகினி

ஒரு விதி விலக்கே ஆகும். அதற்கு மறுக்க முடியாத ஒரே காரண — அவர் உண்மையிலே ஒரு சிறந்த நடிகை என்பதுதான்.

செல்லம் ஒரு உன்னத நடிகை என்பதில் அபிப்பிராய பேதமே இருக்காது. "எந்த வேஷத்தைக் கொடுத்தாலும் திறம்பட நடிப்பேன்" என்று அவர் உறுதியாகக் கூறுவதைப்போல முன்பே செய்தும் காட்டியிருக்கிறார். கண்டவர்களை கண்ணடித்து மயக்கும் தாஸி; அடக்க ஒடுக்கம் மிகுந்த குடும்ப ஸ்திரீ; அன்பு மிக்க தாயார்; வெறுப்பு மிக்க சிற்றன்னை; அநாகரீக உடையணிந்த காட்டு மிராண்டி; ஆங்கிலத்தைப் பிளந்து தள்ளும் லேடி அட்வகேட்; சிரிப்பை உண்டுபண்ணும் புராதன பாத்திரம்; நவநாகரீகம் முதிர்ந்த தற்கால சமூகப் பாத்திரம்—இது போல ஒன்றுக்கு ஒன்று நேர்மாறான பல வேஷங்களை அவர் நன்கு நடித்துப் புகழ் பெற்றிருக்கிறார். காதல், சோகம், ஹாஸ்யம், அன்பு, வெறுப்பு, பகை முதலிய பல வித ரஸ பாவங்கள் நிறைந்த பாத்திரங்களை அவர் நடித்துக் காட்டியிருக்கிறார். சந்தர்ப்பம வாய்த்த போது அவரது நடிப்பு உச்சநிலையை அடைந்திருக்கிறது. ஆனால் மற்ற சமயங்களிலோ அவரது நடிப்பு வெறுக்கத் தக்கதாயிருந்ததில்லை.

ஒழுங்காக நாலு வார்த்தை சம்பாஷணையைப் பேசத் தெரியாத அவலக்ஷணங்களை மேக்கப் மூலம் அழகிகளாக மாற்றி அவர்களுக்கு இரவல் குரல் வாங்கி, இலவசமாக நடனம் கற்றுக் கொடுத்து, அவர்களை நக்ஷத்திரமாக்குவதற்கு அரும் பாடுபடும் நம் பட முதலாளிகள், வசீகரமான முகத் தோற்றமும், இயற்கை நடிப்பும், பேச்சுத் திறமையும் பொருந்திய செல்லத்தின் விஷயத்தில் பராமுகமாகவே இருந்து வந்திருக்கிறார்கள். செல்லம் ஒரு சிறந்த நடிகை என்பது அவர்களுக்கு சந்தேகமறத் தெரிந்திருந்திருந்தும், அவருடைய திறமை பூராவும் வெளியாகக் கூடிய வேஷங்களையும், பிரதான பாகங்களையும் அவருக்கு அளிக்காதது ரஸிகர்களுக்கு ஒரு பெரும் குறையாக இருந்து வருகிறது.

செல்லம் சென்ற பதினொன்கு வருஷ காலத்தில் பத்தொன்பது படங்களில் நடித்திருக்கிறார். அவர் முதன் முதலில் சினிமாவில் பிரவேசித்தது ஸவுத் இந்தியா பில்ம் கார்பொரேஷன் (பி. எஸ். வி. ஐயரின் டைரெக்ஷனில்) தயாரித்த கௌசல்யா என்ற சமூகப் படத்தின் மூலமாகும். இந்தப் படத்தை நேயர்களில் ஒரு சொற்பப் பேர்கள் தான் பார்த்திருக்கக் கூடும். ஏனெனில், இப் படம் சென்னை

அவர் அங்கு ஒரு வக்கீலாக வும், உபாத்தியாயராகவும் தொழில் நடத்திவந்தார்.

செல்லத்துடன் பிறந்தவர் கள் இரு தமையன்மார்கள்



கெயிட்டி டாக்கீஸில் ஆரம்ப தினத் தன்று ஒரே ஒரு காட்சிமட்டும்தானே காட்டப்பட்டது! அதை அன்று பார்த்த அந்த சொற்பப் பேர்களுக் குக் கூட செல்லம் அப்படத்தில் நடித் திருக்கும் விஷயம் தெரிந்திருக்காது. அந்தப் படத்தில் செல்லம் நடிக்க முற் பட்டது ஒரு எதிர்பாராத நிகழ்ச்சியா கும். அதுவும் தாமாக அவர் இஷ்டப் பட்டுச் சேரவில்லை. சந்தர்ப்பங்கள் அவரை இழுத்து வந்து சினிமாவில் வலுவில் புகுத்தி விட்டன.

செல்லம் என்ற சினிமாப் பெயர் கொண்ட கனகவல்லி ஒரு கௌரவ மிக்க வைஷ்ணவ பிராமண குடும்பத் தில் பிறந்தவர். அவரது சொந்த ஊர் தஞ்சாவூருக்கு சமீபமுள்ள கம்பய கத்தம் என்ற சிறிய கிராமமாகும். இருந்தபோதிலும், செல்லத்தின் தகப் பனர் ஸ்ரீ. கே. ரங்கஸ்வாமி ஐயங்கார் சிதம்பரத்தில் குடியேறி யிருந்தார்.

மட்டும்தான். அவர்களில் ஒருவர் (கே. ஆர். கிருஷ்ணஸ்வாமி) பி.ஏ., பி.எல். பட்டம் பெற்றவர். இப்பொழுது சென்னையில் வசித்து வருகிறார் இன் னொருவரோ (கே. ஆர். ஸ்ரீநிவாஸ ராகவன்) புனவில் இராணுவ அதிகா ரியாக இருக்கிறார். இவர்களெல்லாம் சிறு குழந்தைகளாய் இருந்தபோதே அவர்களுடைய தாயார் இறந்துவிட் டார். அதன்பின் அவர்களது தகப்ப னர் அவர்கள் மீது கொண்டிருந்த மிகுந்த அன்பு காரணமாக மீண்டும் விவாஹம் செய்து கொள்ளாமல் அவர்களை அதிக வாஞ்சையுடன் வளர்த்து வரலானர்.

செல்லம் சிறு பெண்ணாக இருந்த போதே மிக துறு துறுப்பாய் இருந்தா ராம். தம் வகுப்பில் அவர்தான் முதல் பெண்ணாக விளங்கி வந்தாராம். அதிர்ஷ்டம் படத்தில் அவர் லேடி வக்கீலாகத் தோன்றி ஆங்கில பாஷை

யை (தமக்குத் தெரியாதென்றாலும்) வெளுத்து வாங்கினார். அவரை மட்டும் படிக்க வைத்திருந்தால் உண்மையிலேயே அவர் ஒரு லேடி வக்கீலாக ஆகியிருக்கக் கூடும் என்று தாராளமாய் சொல்லுவேன். ஆனால் அவரது பதினோராவது வயதிலேயே அவருக்குத் திருமணம் நடந்தேறியதனால் படிப்பு முற்றுப் பெற்றது.

செல்லத்தை மணந்து கொண்டவர் பம்பாயில் ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் உத்தியோகம் பார்த்து வந்தார். அவரிடம் விரும்பத் தகாத சில கெட்ட பழக்கங்கள் குடி கொண்டிருந்தமையாலும், அக் குடும்பத்தில் இருந்த வேறு சிலரது கொடுமைகள் காரணமாகவும் செல்லம் வர்ணிக்க முடியாத கஷ்டங்களை அநுபவிக்க நேர்ந்ததாம். குடும்பத்தின் பொருளாதார நிலைமை தாங்க முடியாத நிலையை அடையவே செல்லத்தையும், அவரது இரு பெண் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு, அவரது கணவர் சென்னைக்கு வந்தார்.

இந்த சமயத்தில் தான் கௌசல்யா படம் சென்னையில் தயாராகி வந்தது. அந்தக் கம்பெனியில் செல்லத்தின் கணவருக்குத் தெரிந்த நண்பர் யாரோ இருந்ததால், அவர் செல்லத்தையும் குழந்தைகளையும் அழைத்துச் சென்று அந்தக் கம்பெனி நடந்துவந்த வீட்டில் தற்காலிகமாகத் தங்கச் செய்தார்.

மறு நாள் செல்லத்தின் கணவர் எங்கோ வெளியே புறப்பட்டுச் சென்றார். ஆனால் அன்று சென்றவரைப் பற்றி இன்றுகூட அவருக்கு எவ்விதத் தகவலும் கிடைக்க வில்லையாம். அதனால் செல்லம் தம் இரு குழந்தைகளையும் வைத்துக் கொண்டு தவியாய்த் தவிக்க வேண்டியதாகி விட்டதாம். அனாதரவாய் விடப்பட்ட செல்லம் என்ன செய்வதென்று தோன்றாது விழித்தாராம். அவருடைய பரிதாப நிலைமைக்காக இரங்கிய அக் கம்பெனியார், செல்லத்திற்கு இஷ்டமிருக்குமானால், அவருக்குத் தாங்கள் தயாரித்து வந்த படத்தில் ஒரு வேஷம் தருவதாகவும், கம்பெனி வீட்டிலேயே சாப்பிட்டுக் கொண்டு தங்கி யிருக்கலாமென்றும் கூறினார்களாம்.

செல்லம் ஒரு கிணற்றுத் தவளை போல குடும்ப சாகரத்தில் ஈடுபட்டிருந்தவர். "நாடகமும், சினிமாவும் ஒழுக்கங் கெட்டவர்களுக்கே உகந்த தொழில்" என்று பொதுவாக நிலவி வந்த அபிப்

பிராயத்தையே அவரும் கொண்டிருந்தார். ஆதலால் முதலில் அவர் கம்பெனிக்காரர்கள் கூறிய யோசனையை ஏற்றுக் கொள்ளத் தயங்கினர். ஆனல் "பசி வந்திடின் பத்தும் பறந்து போம்" என்பார்கள். இந்த நிர்க்கதியான நிலைமையிலிருந்து எப்படியா

வது சில தினங்கள் சமாளித்துக் கொண்டால், பிறகு, கணவர் திரும்பி வராவிட்டாலும், தகப்பனார் வீட்டிற்காவது போய்ச் சேர்ந்து விடலாம் என்ற எண்ணம் செல்லத்திற்கு ஏற்படவே சினிமாவில் நடிக்க ஒப்புக் கொண்டார்

"கௌசல்யா" படம் ஒரு "தினுசாக" வெளிவந்தது. படம் உருப்படியாக இல்லையென்றாலும், 'செல்லம் அசன்பின் சினிமாவிலேயே தான் நடித்துக் கொண்டிருக்க வேண்டும்' என்ற விஷயம் உருப்பட்டு விட்டது. செல்லம் சினிமாவில் சேர்ந்து விட்ட விஷயம் எப்படியோ காட்டுத் தீ போல் அவருடைய உறவினர்களி

டையே பரவி விட்டது. ஆகவே இப் படம் முடிந்த பின்னர்கூட செல்லம் தம் தகப்பனார் வீட்டுக்குப் போக முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது.

கௌசல்யா படத்திலிருந்து விடுபட்டபின் செல்லத்தை மீண்டும் பட்டினியும், கஷ்டங்களும் வெகுவாகப் பிடித்துக் கொண்டன. அந்த சமயத்தில் அவருக்குத் தற்செயலாய் டி. என். மீனாக்ஷியின் பரிச்சியம் ஏற்பட்டது. அவரது சிபாரிசின் பேரில், மதராஸ் மெயில் படத்திற்கு நடிக நடிகைகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்த நடேசய்யர் என்பவர் செல்லத்தையும் அப் படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டு, அவரை பம்பாய்க்கு அழைத்துச் சென்றார்.

.கோமதி.


.வேதாள உலகம்.

மதராஸ் மெயில் பண வசூல் மிக்க படமாக முடிந்தது. "யாரோ செல்லம் என்ற ஒரு புது நடிகை இப்படத்தில் ரொம்ப நன்றாய் நடித்திருக்கிறார்" என்று ஜனங்கள் பேசத் தலைப்பட்டனர். இப்படி அவர்கள் பேசிக் கொண்டது பாலயோகினியைத் தயாரித்து வந்த டைரெக்டர் கே. சுப்ரமண்யத்தின் கூர்ந்த காதுகளிலும் விழுந்தது. உடனே அவர் செல்லத்தை அப் படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டார்.

எஸ். டி. சுப்புலக்ஷ்மியும், கே. சுப்ரமண்யமும் செல்லத்தை மிகப் பரிவுடன் நடத்தியது செல்லத்திற்கு மிக ஆருதலளித்ததாம். **பாலயோகினி**யில் அவருக்கு சப்-கலெக்டரின் மனைவி வேஷம் அளிக்கப்பட்டது. அவ் வேஷத்தை அவர் பாராட்டத் தக்கபடி நடித்திருப்பதோடு, "கண்மணியே தாலேலோ" என்ற பாட்டையும் இனிமையாகப் பாடியிருக்கிறார்.

பாலயோகினிக்குப் பிறகு அவருக்கு சினிமா உலகில் கிராக்கி ஏற்பட ஆரம்பித்தது. **துளஸிதாஸ், தேச முன்னேற்றம்** ஆகிய இரு படங்களுக்கும் அவர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டார். இவ்விரு படங்களிலும் அவருடைய நடிப்பு சுமாராக இருந்தது.

பிறகு செல்லம் **வனராஜ கார்ஸா**னிடம் எக்கச் சக்கமாக மாட்டிக் கொண்டார். இப் படத்தைப் பற்றி அவரிடம் நாம் பிரஸ்தாபித்தால், அவருடைய வாழ்க்கையில் அவர் செய்த ஒரு மாபெரும் தவறை நாம் சுட்டிக் காட்டுவதாக மிக வருந்துகிறார். அப் படத்தில் என்ன வேஷத்திற்காகத் தாம் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டார் என்றே அறியாமல் அவர் கையெழுத்தப் போட்டுவிட்டு தம் கௌரவத்தை இழக்க வேண்டியதாகி விட்டதாம்.

பின்னர் செல்லம் நடித்த **அதிர்ஷ்டம்** படம் அவர் நடித்த எல்லாப் படங்களிலுமே ஒரு முக்கியமான படம் ஆகும். அப் படத்தில் அவருக்கு கதாநாயகி வேஷத்தையும், நடிப்பதற்கு நிறைய வசதியையும் டைரெக்டர் எஸ். டி. எஸ். யோகி ஏற்படுத்திக் கொடுத்தார்.

அதிர்ஷ்டம் படம், செல்லம் ஒரு சிறந்த நடிகை என்பதை உர்ஜிதப் படுத்தியதோடு, அவருக்கு அழியாப் புகழையும் சம்பாதித்துக் கொடுத்தது. லேடி வக்கீலாகத் தோன்றி நீதி மன்றத்தில் வாதாடும் காட்சியில் அவர் பிரமாதமாய் நடித்திருக்கிறார்.

அதிர்ஷ்டத்திற்குப் பிறகு அவர் நடித்த **ராஜ்ய புத்ரி, மதன காமராஜன்** இரண்டு படங்களிலும் அவரது நடிப்பு துரதிருஷ்டமாகவே முடிந்தது. ஆனால் பிறகு அவர் நடித்த **என் மனைவி** படம் அவருக்கு மீண்டும் நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொடுத்தது. அதன் பின் அவர் காரைக்கால் **அம்மையார், பூம்பாவை, மீரா, லவங்கி, தெய்வ நீதி, நாம் இருவர், உதங்கர்** ஆகிய படங்களி

(தொடர்ச்சி 47-ம் பக்கம் பார்க்க)

குண்டூசியைக் கேளுங்கள்

பீலிக்ஸ் (கொழும்பு)

ஞானசௌந்தரியில் நடிக்கும் எம். வி. ராஜம்மாவுக்கு விவாகம் ஆகிவிட்டதா? அவருக்கு தற்போது என்ன வயதிருக்கும்? தற்போதைய விலாஸம் என்ன?

ராஜம்மாவிடம் "உங்களுக்கு விவாகம் ஆன விஷயம் ஞாபகமிருக்கிறதா" என்று நீர் கேட்டிருந்தால் மிகப் பொருத்தமாயிருந்திருக்கும்! அவருக்கு சுமார் 30 வயதாகிறது. விலாஸம்:—பித்தாபுர நகர், தேனும்பேட்டை, சென்னை.

ஊமத்துரை (கல்கத்தா)

குண்டூசியாரே! நான் ஒரு கூத்தாடி. நல்லதங்காள் நாடகத்தில் கோவலன் வேஷம் போட்டிருக்கிறேன். வள்ளி சரித்திரத்தில் அர்ஜுனனாகத் தோன்றியிருக்கிறேன். ஹரிச்சந்திரா நாடகத்திலோ ஹனுமார் வேஷத்தில் பிரமாதமாய் நடித்திருக்கிறேன். பட முதலாளிகள் எனக்கு ஒரு "சான்ஸ்" கொடுப்பார்களா?

கொடுக்கமாட்டார்கள். உமக்கு கதாநாயகன் வேஷத்தைக்கொடுத்தால் நீர் பைத்தியக்காரனாய் நடித்து வைத்தீரானால் என்ன செய்வது!

ஏ. இ. துரை (யாழ்ப்பாணம்)

எம். எஸ். சரோஜினி நடித்த முதல் படம் எது? அவருக்குப் புகழ் மாலை சூட்டிய படம் எது?

அவர் முதன் முதலில் முக்கிய பாகம் ஏற்று நடித்த படம் "ஆர்யமாலா." அவருக்குப் புகழ்மாலை சூட்டியது "ஜகதலப்ரதாபன்."

வி. ஆதி (கீழநத்தம்)

எம். வி. மணியின் தற்போதைய விலாஸத்தைத் தெரிவிக்கவும். இப்பொழுது எந்தப் படத்தில நடித்துக் கொண்டிருக்கிறார்?

மணி ஜெமினியின் அடுத்த படமொன்றில் நடிப்பார் போலிருக்கிறது. அவரது விலாஸம்:— 54 புதுத் தெரு, சிதம்பரம்.

முஹம்மது ஹமீது (செங்கற்பட்டு)

நம் பட முதலாளிகள் ஆடை, நடிப்பு, பாட்டு முதலிய விஷயங்களில் ஹிந்திப் படங்களை காப்பியடிக்கிறார்களே; ஏன்?

காரணம் தெரிந்தது தானே! ஹிந்தி எதிர்ப்பாளர்கள் தங்கள் கடாக்ஷத்தை சினிமா விஷயத்தில் திருப்பினால் எத்தனையோ பெரிய தொண்டாயிருக்கும்.

கே. ஐயப்பன் (கொல்லம்)

டி. ஆர். ராஜகுமாரியும், டி. ஆர். ரஜனியும் சகோதரிகளா?

உடன் பிறந்த சகோதரிகள் அல்ல. ஆனால் படத்தில் இருவரையும் பார்க்கும்போது சில விஷயங்கள் அந்த மாதிரி நினைக்கத் தூண்டுகின்றன!

எச். முஸ்தபா (நாகூர்)

பானுமதியை நாடகங்களுக்கு அழைத்தால் வருவாரா? தற்போது எந்தப் படங்களில் நடித்து வருகிறார்?

பானுமதிக்கு நாடக அனுபவம் இடையாது. ஆதலால் நாடகங்களுக்கு வரவும் மாட்டார். தற்போது அவர் "ராஜமுக்தி", "ரத்ன குமார்", "நல்ல தம்பி" ஆகிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

ஆர். வி. ஏ. (நந்திதுர்கம்)

குண்டூசியாரே! உம்முடைய வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாய் தெரிவிக்கவும்.

சுய சரிதமாக எழுதக்கூடிய அளவு சுவாரஸ்யமானதல்ல அது. ஆதலால் மன்னிக்கவும்.

ஜோஸப் பசங்கா (கீழ வைப்பார், இலங்கை)

குண்டூசியாரே! நான் உம்மைப் போல அவதற்கு என்ன செய்ய வேண்டும்?

நீர் என்னைப் போல ஆவதில் எனக்கு ஆட்சேபனையே கிடையாது. ஆனால் கன்னத்தில் கத்திக் குத்து வாங்கிக் கொள்ளுவதற்கும் நீர் தயாரா என்பதை முதலில் தெரிவியும்!

எஸ். வி. ராஜு (மன்னார்குடி)

எஸ். எஸ். கொக்கோ எவ்விதம் இறந்தார் என்பதைத் தெரிவிக்கவும்.

இறப்பதற்கு முன் சில மாதங்கள் கொக்கோ கடும் பசிப் பிணிக்கு உள்ளாகி யிருந்தாராம். இறந்த அன்று அவருக்கு ஏதோ பணம் கிடைக்கவே தம் கவலைகளை மறப்பதற்காக மதுவை நாடினாராம். அளவுக்கு மீறினால் அமிர்தமே விஷம் என்பார்கள். அப்படியிருக்க "விஷத்"தை (மதுவை)யே அளவுக்கு மீறி சாப்பிட்டால் அவர் பிழைக்கவா கூடும்?

"முரளீதரன்" (சென்னை)

தேவதாஸி படத்தைத் தயாரித்த சுந்தரம் வேறு ஏதேனும் படங்களைத் தயாரிக்கிறாரா?

படத்தைத் தயாரிப்பதா? "தேவதாஸி" விளம்பரப் பணத்தையே இன்னமும் அவர் கொடுத்தபாடில்லை. நீர் படத்தைப் பற்றிக் கேட்க வந்து விட்டீரே!

டி. வி. லக்ஷ்மணன் (சென்னை)

குண்டூசியாரே! உம் வீட்டிற்கு விருந்தாளியாக வர உத்தேசம். என்ன சொல்கிறீர்?

ஆட்சேபனையேயில்லை. தேதியைக் குறிப்பிட்டால் அன்று நான் வீட்டில் இல்லாம லிருப்பதற்கு சௌகரியமாயிருக்கும்!

க. மு. கம்சா முகைதீன் (யட்டோகொட)

இவ்வளவு 'இனிமையாய் பாடும் டி. கே. பட்டம்மாள் சினிமாப் படங்களில் ஏன் நடிப்பதில்லை?

அவர் நடிப்பது சாத்தியமில்லாததால் தான் சும்மா பாடிக்கொண்டிருக்கிறார். அது தெரியாதா உமக்கு!

வி. எம். ராஜேந்திரன் (வேலூர்)

சென்னையில் எவ்வளவு சினிமாத் தியேட்டர்கள் உள்ளன? அவைகளைத் தெரிவிக்கவும்.

கேஸினோ, கெயிட்டி, நியூ எல்பின்ஸ்டன், பாரகன், ஸ்டார், கபாலி, ஸாகர், மிட்லாண்ட், வெல்லிங்டன், நியூ குளோப், ஸன், ஞானகிராம், லக்ஷ்மி, (அமிஞ்ஜிக்கரை), லக்ஷ்மி (பெரம்பூர்) சரஸ்வதி, ராக்ஸி, கிரௌன், ரீகல், ஸெலெக்ட், சினிமா ஸென்ட்ரல், பிராட்வே, பிரபாத், மினர்வா, பிரைட்டன்—ஆக மொத்தம் 24 தியேட்டர்கள் உள்ளன.

இம் மாதம் வெளி வந்திருக்கும் "வேதாள உலக"த்தில் பாம்பாட்டி நடனம் ஆடும் பத்மினி.

எம். ஜோன் (பினங்கு)

என் நண்பர் ஒருவருக்குப் படிப்பே இடையாது. அவருக்கு சினிமாவில் சேர ஆவல். உம் அபிப்பிராயம் என்ன?

படிப்பில்லாவிட்டால் என்ன? சினிமாவில் சேர்ந்த பின்னர் அவர் நல்ல படிப்பினைத் தெரிந்து கொண்டு விடுவார்!

ஸ்ரீமதி (மைலாப்பூர்)

பாரிஜாதம் படத்தில் நடிக்கும் டி. ஏ. ஜெயலக்ஷ்மிக்கு விவாஹம் ஆகிவிட்டதா? அவர் நடித்த முதல் படம் எது?

அவருக்கு விவாஹம் ஆகிவிட்டதாம். முதன் முதலில் நடித்த படம் "கண்ணகி."

மைக்கேல் ரூபீன் வர்மன் (கொழும்பு)

தென்னிந்தியப் படத் தொழிலின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தும் அம்சம் எது?

இதைக் கண்டு பிடிப்பதென்ன அவ்வளவு கஷ்டமாகவா இருக்கிறது! இவை தானே தமிழ்ப் படங்களில் முக்கிய அம்சங்களாக இருக்கின்றன?

எஸ். முத்துகிருஷ்ணன் (கொழும்பு)

சந்திரலேகாவில் நடிக்கும் சுந்தரி பாய் என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? அவருக்கு விவாஹம் ஆகிவிட்டதா? இல்லையென்றால் நான் அவரை மணந்து கொள்ள விரும்புகிறேன்.

உம் துரதிருஷ்டத்தை என்னவென்று சொல்லுவது! கொத்தமங்கலம் சுப்பு அந்த விஷயத்தில் முந்திக் கொண்டு விட்டாரே! சுந்தரிபாய் மஹாராஷ்டிர வகுப்பைச் சேர்ந்தவர்.

ஜி. முத்தப்பா (சத்திரப்பட்டி)

இது காலம் வரை சில்லரை வேஷங்களிலேயே தோன்றி வந்த எம். ஜி. ராமச்சந்திரனுக்கு சமீபகாலமாக கதாநாயகன் வேஷம் கொடுப்பது சரியா?

விரைவில் வெளிவர விருக்கும் "கிருஷ்ண பக்தி" தமிழ்ப் படத்தில் நடிக்கும் ஏ. ஆர். சகுந்தலா.

ரொம்பவும் சரிதான். "சில்லரை வேஷதாரி சில்லரை வேஷதாரியாகவே தான் நடிக்க வேண்டும்" என்று நீர் நினைத்திருந்தால் அது மிகவும் தவறாகும்.

எஸ். கே. மூர்த்தி (திருவள்ளூர்)

ஜெமினியின் ஔவையார் எப்பொழுது வெளிவரும்?

நமக்கெல்லாம் கடவுள் நீண்ட ஆயுளைக் கொடுத்திருக்கும் போது நீர் ஏன் இப்படி அவசரப்படுகிறீர்!

எம். ஜி. ஜி. பிரகாசம் (கள்ளிகுளம்)

'ஸ்டன்ட்' நடிகர்களான கே. டி. ருக்மணி, எம். ஏ. ராஜாமணி, பி. எஸ். ஸ்ரீநிவாஸ ராவ், ஆகியோர் தற்போது எந்தெந்தப் படங்களில் நடிக்கின்றனர்?

கே. டி. ருக்மணி சென்னையில் சும்மா இருக்கிறார். ஸ்ரீநிவாஸ ராவ் பம்பாயில் சும்மா இருக்கிறார். எம். ஏ. ராஜாமணியோ இவ்வுலகை விட்டுச் சென்று சும்மா இருக்கிறார்.

எம். கே. மூர்த்தி (திருவள்ளூர்)

சினிமா ரஸிகர்கள் பலர் பலவித மாய் ஒரே படத்தைப் பற்றி விமர் சனம் செய்கிறார்களே. இவற்றில் எதை நம்புவது ?

ஒருவருடைய விமர்சனத்தையும் அல்ல. நீரே படத்தைப் பார்த்து விட்டுஒரு புது அபிப்பிராயத்தை ஏற் படுத்திக் கொள்ளும்!

பி. எம். சாமி (ரங்கூன்)

மாஸ்டர் சேதுராமன் என்ன ஜாதி யைச் சேர்ந்தவர் ?

ஸ்ரீவைஷ்ணவ ஜாதியில் பிறந்தவர் அவர்.

எம். கே. முத்து (ரங்கூன்)

புளிமூட்டை ராமசாமி இந்த ரேஷன் காலத்தில் கூட இப்படி பெருப்பதன் ரகஸிய மென்ன ?

அந்த ரகஸியத்தைத் தெரிந்து கொண்டு நீரும் ஒரு 'புளிமூட்டை' ஆகிவிடலாம் என்ற எண்ணமோ !

எம். ராஜப்பா (நங்கவள்ளி)

கிருஷ்ணன், ராமச்சந்திரன், துரைராஜ், புளிமூட்டை இவர்களில் யாருக்கு முதல் ஸ்தானம் ?

சந்தேகமென்ன; உருவத் தோற்றத் திலாயிருந்தால் சந்தேகமன்னியில் புளிமூட்டைக்குத்தான் அந்த ஸ்தா னம் கிடைக்கும் !

"பரதேசி" (சென்னை)

குடும்பப் பெண் சினிமாவில் நடிக்க வேண்டு மென்று சில பத்திரிகைக் காரர்கள் எழுதுகின்றார்களே. இதைப் படித்து விட்டு சினிமாவில் சேருபவர் கள் கற்பை இழக்க நேரிட்டால் அதற்கு அவர்கள் பொறுப்பாளிகளா வார்களா ?

அவர்கள் சினிமாவில் சேரச் சொல்லு கிறார்களே தவிர கற்பை இழக்கச் சொல்லவில்லையே !

எம். கே. எஸ். (வட்டவளை, இலங்கை)

சென்னையில் "அகில இந்திய சினி மாக் கம்பெனிலிமிடெட்" என்றபுதிய கம்பெனியை ஸ்தாபிப்பதற்காக பங்கு கள் வசூல் செய்தார்களே; அது என்ன ஆயிற்று ?

இந்தக் கம்பெனியைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால், சென்னை யில் சில சினிமாக் கம்பெனிகள் உண்டு. அவைகள் ஆயுள்காலம் பூரா வும் (படத்தை ஆரம்பிப்பதற்குப் பதில்) பங்குத் தொகைகளை வசூலிப்பதி லேயே ஈடுபட்டிருக்கும். வசூலான வரையில் முழு "லாபம்" பாருங்கள் !

மளமளவென்று வளர்ச்சி பெற்று வரும் ஆர். கே. எஸ். பிக்சர்ஸின் "தேவ மனோஹரி" தமிழ்ப் படத் தில் ஹொன்னப்பாவும், புது நடிகை லக்ஷ்மியும்.

மணி (பம்பாய்)

"மேக்கப் மென்" உதவியன்றி "கேமிரா மென்" மாத்திரம் ஒரு ஒல்லியான நடிகரையோ அல்லது நடிகையையோ பருமனைத் தோன் றும்படி படம் எடுக்க முடியுமா ?

ஓரளவுக்கு சாத்தியம்தான். ஆனால் நம் நடிக, நடிகைகளில் அநேகரும் பருமனை காட்சியளிப்பதற்கு இது தான் காரணமாயிருக்குமோ என்று நீர் சந்தேகிக்க வேண்டாம் !

எஸ். பாவாடை
(அலோஸ்டார், மலேயா)

நம் நாடு சுதந்திரம் அடைந்து விட்டதே. இனி கட்ட பொம்மு போன்ற படங்களை ஏன் தயாரிக்கக் கூடாது?

நாடு சுதந்திரம் அடைந்து விட்டது உண்மைதான். ஆனால் நம் படமுதலாளிகள் பழம் புராணங்களிலிருந்து சுதந்திரம் பெறவில்லையே, ஸ்வாமி!

மூ. அப்துல் லத்தீபு
(பாக்கான் சிராய், மலேயா)

டி. ஆர். ராஜகுமாரியும், ரஞ்சனும் ரிஜிஸ்டர் கலியாணம் செய்து கொண்டிருப்பதாக இங்கு வதந்தி உலவுகிறதே. உண்மையா?

உண்மையல்ல; இது யாராவது கண்ட கனவாயிருக்கலாம்!

மூ. சுப்பிரமணியம்
(சப்போ, மலேயா)

சதி சுகன்யா படத்தில் மஹாலிங்கம் "வேட்டகத்துக்கு" என்று கூறுகிறார். இது தமிழ்ப் பதந்தானா?

ஆம்; ஆனால் "வேற்றகம்" என்று சொல்லியிருக்க வேண்டும்.

எஸ். ரங்கஸ்வாமி (மாரிக்குப்பம்)

ஜெமினி ஞான சௌந்தரியில் அன்னை மேரியை "அம்பா, ஜெகதம்பா" என்றெல்லாம் பாடுவது சரியா?

சரியல்ல என்றுதான் நினைக்கிறேன்.

கே. மகாதேவன் (ஓம்பத்துவேலி)

கேள்விகளை கார்டில் எழுதலாமா? கவரில் எழுதுவதால் மூன்று பங்கு செலவாகிறதே?

கவரில்தான் எழுதவேண்டும் என்று நான் எப்பொழுதும் சொல்லவில்லையே. கார்டிலேயே தாராளமாய் எழுதி அனுப்பும்.

எஸ். கன்னையன் (அல்லி நகரம்)

ராஜகுமாரியில் நடிக்கும் எம். ஜி. ராமச்சந்திரன் பாடும் பாட்டுகள் அவராலேயே பாடப்பட்டவையா? இல்லையென்றால் குரல் இரவல் கொடுத்திருப்பவர் யார்?

குரல் இரவல் கொடுத்திருப்பவர் எம். எம். மாரியப்பா என்று முன்பே தெரிவித்திருக்கிறேனே.

எஸ். ராமன் (பம்பாய்)

ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணியில் மஞ்சளழகியாக நடிக்கும் ஆர். பத்மாவும், சபாபதியில் நடித்த ஆர். பத்மாவும் ஒரே நபர்தானா? அவர் டி. ஆர் ராமச்சந்திரனை வாழ்க்கைத் துணைவராகக் கொண்டிருப்பது உண்மையா?

நீர் குறிப்பிட்டுள்ள இரண்டு படங்களிலும் நடிப்பவர் ஒரே நபர்தான். ஆனால் அவர் வாழ்க்கைத் துணைவராகக் கொண்டிருப்பவர் டி. ஆர். ராமச்சந்திரன் அல்ல; எல். எஸ். ராமச்சந்திரன்.

எஸ். எம். சாமி (மதுரை)

பூ. ஆர். ஜீவரத்தினத்திற்கு வாயில் மேல்வரிசையில் ஒரு பல் கிடையாதே.

அதி துரிதமாய் பூர்த்தியடைந்து வரும் நரேந்திரா பிக்சர்ஸாரின் "ராஜ முக்தி"யில் பானுமதி தம் பாகத்தை ஆடித் தீர்த்துவிட்டார்.

"அபிமன்யு"விலோ அந்த இடத்தில் புதிதாய் பல் காணப்படுகிறதே? எப்படி திடீரென்று பல் தோன்றியது?

மாடுகளுக்கு மதிப்புக் கண்டு பிடிப்பதற்காக பல்லைப் பிடித்துப் பார்ப்பார்கள். ஆனால் நானென்னவோ நக்ஷத்திரங்களுக்கு மதிப்புப் போடுவதற்காக அவர்களுடைய பல்லைப் பிடித்துப் பார்க்கும் வழக்கமில்லை!

மை. சி. சின்னப்பா (தூத்துக்குடி)

சுதர்சனில் சின்னப்பாவுக்கு முதல் மனைவியாகவும், இரண்டாவது மனைவியாகவும் யார் யார் நடிக்கின்றனர்?

கண்ணாம்பா முதல் மனைவியாகவும், யோக மங்களம் இரண்டாவது மனைவியாகவும் நடித்து வருகின்றனர்.

வி. கிருஷ்ணமூர்த்தி (ஆம்பூர்)

நாம் இருவரில் டி. ஏ. ஜெயலக்ஷ்மிக்கு 'ஸவுண்ட் பாக்ஸ்' இரவல் கொடுத்திருப்பவர் யார்?

திருச்சி ரேடியோவில் பாடும் உத்தியோகத்திலிருந்து வந்த டி. எஸ். பகவதியின் "ஸவுண்ட் பாக்ஸ்" அது.

"கிருஷ்ண பக்தி"யில் ஒரு நெருக்கடியான கட்டம் போலிருக்கிறது இது. (ஆர். பாலசுப்ரமண்யமும், புளிமூட்டை ராமஸ்வாமியும்.)

க. கார்த்திகேசு (கொழும்பு)

நான் சென்னைக்கு வந்தால் குமாரி கமலாவை நேரில் சந்திக்க முடியுமா?

குமாரி கமலாவை நேரில் சந்திக்க முடியும் என்றால் அதற்காகவே ஆயிரக் கணக்கானவர்கள் சென்னைக்கு வரத் தயாராயிருப்பார்கள் என்பதென்னவோ உண்மை. ஆனால் அதெல்லாம் எங்கே இந்த சினிமா நக்ஷத்திரங்களுக்குத் தெரிகிறது. திரையில் எவ்வளவுக் கெவ்வளவு 'அதிகமாக'க் காட்சி அளிக்கிறார்களோ அவ்வளவுக்கு அவர்கள் வாழ்க்கையில் ரஸிகர்களின் கண்களில் படாமல் ஒளிந்துகொள்ளுகிறார்களே! அதற்கு என்ன செய்யலாம்?

டி. பி. சாமிநாதன் (திண்டிவனம்)

டி. ஆர். ராமச்சந்திரன் எது வரையில் படித்திருக்கிறார்? அவர் முதன் முதலில் நடித்த படம் எது? அவருக்கு வயது என்ன ஆகிறது?

சுமார் முப்பத்திரண்டு வயதான ராமச்சந்திரன் ஐந்தாவது வகுப்பை மிகுந்த சிரமத்தின்பேரில் கடந்தவர். அவர் முதன் முதலில் நடித்தது "நந்த குமார்" படத்தில் ஒரு சிறிய வேஷத்தில்.

பி. வேலுசாமி (ஆண்டிப்பட்டி)

ஏ. சகுந்தலா முதன் முதலில் நடித்த படம் எது?

அவர் முதன்முதலில் நடித்தது "சக்தி மாயா" படத்தில் என்று நினைக்கிறேன்.

வி. கோவிந்தராஜுலு (திருக்கோவிலூர்)

கே. பி. சுந்தராம்பாள் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ஜெமினியின் "ஔவையார்" படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

"கடலோடி" (பம்பாய்)

அபூர்வ சிந்தாமணியில் நடிக்கும் ஸ்ரீமதி............யையேதான், தான் மணந்து கொள்ளப் போவதாகவும், அது சாத்தியப்பட வில்லை யென்றால்

உயிரையே விட்டுவிடப் போவதாகவும் என் நண்பர் ஒருவர் எழுதினர். ஆனால் இதுவரை பதில் கிடைக்காததேன்?

சமீப வருஷங்களாக, எமதர்மனுக்கு ஏராளமான வேலை என்பதுதான் உமக்குத் தெரிந்திருக்குமே! ஆதலால் உம் நண்பருக்கு உடனே பதில் கிடைக்கவில்லை போலிருக்கிறது!

டி. ஆர். எதிராஜன்
(விக்ரம சிங்கபுரம்)

மாடர்ன் தியேட்டர்ஸ் டைரெக்டர் டி. ஆர். சுந்தரம் ஒரு ஐரோப்பிய மாதை மணந்து கொண்டிருப்பதாக கேள்விப்பட்டேன். உண்மைதானு?

காதில் விழும் செய்திகள் சில சமயம் இது போல உண்மையாகவும் இருப்பதுண்டு!

ஏ. எம். சூசை மாணிக்கம்
(சவுந்தர பாண்டியபுரம்)

கே. தவமணிதேவிக்கு "இலங்கைக் குயில்" என்ற பட்டத்தை யார் வழங்கியது?

யார் என்று தெரியவில்லை. ஆனல் இப்பட்டத்தை வழங்கியவரின் "சங்கீத ஞானம்" ஔரங்கசிப்பின் சங்கீத ஞானத்திற்குக் குறைந்ததாய் இராது என்று தோன்றுகிறது!

* * *

என் ஆபீஸ் வேலைக்காரனிடம் குண்டுசி வாங்கி வரும்படி ஒரு ரூபாய் கொடுத்தனுப்பினேன். அவன் குண்டுசிக்குப் பதில் "குண்டுசி" பத்திரிகையை வாங்கி வந்தான். "குண்டுசி"யைப் பார்த்தபின் அதைத் திருப்பி அனுப்ப மனம் வரவில்லை. ஆனல் குண்டுசி வாங்கி வராததால் என் வேலைக்குச் சற்று இடையூறு ஏற்பட்டது. இதற்காக அவனுக்கு என்ன தண்டனை விதிக்கலாம்?

அவ ்கு ஆறு ரூபாய் "அபராதம்" விதித்து விட்டு, அதை அவனிடம் வசூல் பண்ணமல் நீங்களே எங்களுக்கு (சந்தாவாக) அனுப்பிவையுங்கள்!



சமீப காலமாக பி. யு. சின்னப்பாவுக்கும், தாடிக்கும் அதிக சம்பந்தம் ஏற்பட்டு வருகிறது. இது "கிருஷ்ண பக்தி"யில் அவரது தாடித் தோற்றம்.

குணபாண்டி (முக்கூடல்)

ராஜ முக்தி படத்திற்கு கதை வசனம் எழுதி வந்த "புதுமைப் பித்தன்" இறந்து விட்டாரே. இப்பொழுது அப்படத்திற்கு யார் கதை வசனம் எழுதுகிருர்?

ஸிடாடல் / "ஞான சௌந்தரி"க்கு வசன எழுதிய டி. என். ராஜப்பா இப்ெ ழுது அவ்வேலையை கவனித்து வருகிருர்.

எம். குப்புசாமி (செங்கற்பட்டு)

நான் சினிமாவில் சேருவதற்கு மிக ஆவலாய் இருக்கிறேன். யாருக்கு மனுப்போட்டால் என்னை அழைப்பார்கள்?

ஏனய்யா, இந்த சிரமமெல்லாம் உமக்கு? சினிமாக் கம்பெனிகளுக்கு மனுப்போட்டு நடிகராவதைவிட, காட்டிற்குச் சென்று தவம் செய்து கடவுளைக் காண்பது சுலபமாயிற்றே, ஸ்வாமீ!

ஆர். ஜி. ராஜ் (கிர்க்கி)

பில்ஹணனைப் படம் பிடிக்க முற்பட்ட டி. கே. எஸ். சகோதரர்கள் "அர்தமான் கைதியை" யும் ஏன் படம் பிடிக்கக் கூடாது?

பிடிக்க மாட்டார்கள் என்று ஒருவரும் சொல்லவில்லையே.

எம். முனிசாமி செட்டி (சேலம்)

காலேஜ் குமாரியில் நடித்த டி. எஸ். தமயந்தி எந்தெந்தப் படங்களில் நடித்திருக்கிறார்?

"பார்வதி கல்யாணம், அதிர்ஷ்டம், மணிமேகலை, தேச பக்தி, கங்காவதாரம், விகடயோகி" ஆகிய படங்களிலும் அவர் நடித்திருக்கிறார். தற்போது "கிருஷ்ண பக்தி"யில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

கே. கே. அப்துல் வஹாப் (திருச்சி)

டி. ஏ. ஜெயலக்ஷ்மியும் டி. ஏ. மதுரமும் சகோதரிகளா?

இல்லை.

வி. கே. வாஸன் (மன்னார்குடி)

ஏ. சகுந்தலாவுக்குப் பெற்றோர்கள் இருக்கின்றனரா? இப்பொழுது எந்தப் படத்திலாவது நடிக்கிறாரா?

சகுந்தலாவுக்குத் தாயார் மட்டும் இருப்பதாகக் கேள்வி. அவர் நடிகர் சின்னப்பாவை மணந்து கொண்டது முதல் நடிப்பதை நிறுத்திவிட்டார்!

எம். ஏ. பரமசிவம் (ராயவரம்)

பதினோராயிரம் அடி நீளத்தில் தயாரான படங்களில் எது அதிக நாள் ஓடி நல்ல வசூலைப் பெற்றது?

[ஏவி. எம்.மின்] "நாம் இருவர்"

எம். பிச்சப்பா (பாளையங்கோட்டை)

எம். கே. டி. பாகவதருக்குப் பதில் கே. ஆர். ராமசாமி நடித்த ராஜயோகி படம் ஏன் இன்னும் வெளிவரவில்லை?

நீர் இந்தக் கேள்வியை எனக்குப் பதில் அப்படத்தின் முதலாளியைக் கேட்டிருக்கலாம்.

எம். ஆர். நாகேஸ்வரன் (மதுரை)

கே. எஸ். அனந்தநாராயணய்யர் எந்தெந்தப் படங்களில் நடித்திருக்கிறார்?

காலஞ்சென்ற அனந்தநாராயணய்யர் முதலில் "அல்லி அர்ஜுனா" படத்திலும், பிறகு "ஏகநாத்" படத்திலும் நடித்திருக்கிறார்.

முகம்மட் ஜான் (மன்னார்)

டி. ஆர். மஹாலிங்கம் தற்போது எந்தெந்தப் படங்களில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்?

பக்ஷிராஜாவின் "பவளக் கொடி" மாடர்ன் தியேட்டர்ஸின் "ஆதித்தன் கனவு", சியாமளா பிக்சர்ஸின் "இன்ப வல்லி" ஆகிய படங்களில் அடுத்தாற்போல் தோன்றுவார்.

எம். புத்திசிகாமணி (சாத்தூர்)

ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணியில் தம்பதியாய் நடிக்கும் மாதுரி தேவியின் சொந்த ஊரும் சொந்தப் பெயரும் என்ன?

சென்னைவாசியான அவரை சினிமா உலகத்தில் "வாயாடிப்-போலிப் பாஞ்சாலி" படம் வெளி வந்த காலத்தில் எம். எஸ். சந்திரா என்று அழைத்து வந்தனர்.

எஸ். சிக்கண்ணன் (ராசிபுரம்)

ராஜகுமாரி தம் சொந்த தியேட்டரின் ஆரம்ப விழாவை நடத்தும் போது, நான் அவருக்கு ஒரு வெள்ளிக் கூஜாவை பரிசாகக் கொண்டு போக உத்தேசம். அவர் அதை ஏற்றுக் கொள்வாரா என்பதைத் தெரிவிக்கவும்?

என்னைக் கேட்டால், வெறும் கூஜாவைக் கொடுப்பதற்குப் பதில் அது நிறைய காப்பியை நிரப்பிக் கொடுத்தீரானால், அதை ராஜகுமாரி சட்டென்று சாப்பிட்டுவிட்டு தம் களைப்பை மாற்றிக் கொண்டு, உமக்கு உத்ஸாகமாய் வந்தனம் தெரிவிப்பதற்கு சௌகரியமாயிருக்கும்!

"எஸ். பி. எல். தனலக்ஷ்மியை படங்களில் பார்த்து வெகு காலமாயிற்றே" என்ற ரஸிகர்களின் குறையை கிருஷ்ணா பிக்சர்ஸின் "கிருஷ்ண பக்தி" நீக்கிவிடும்.

ஜூபிடரின் "மோஹினி" படம்
தமக்கு எவ்வளவு புகழைக்
கொடுக்குமென்று வி.என்.ஜானகி
யோசிக்கிறார் போலும்.

ஜூபிடரின் "மோஹினி" மூலம்
மாதுரி தேவி புகழேணியில்
மேலும் ஒரு படி உயரச் செல்லு
வார் என்று கேள்வி.

எம். யூ. ஏ.
வரும் "இ
ஒரு

வல
"கிருஷ்ண
தனலக்ஷ
ஆழ்வார்

குண்

இடது பு
"ஆண்டாள்"
கிருள். (ஸ்ரீ வர
கோவிந்த

★

வலது பு
வெளியூர்களில்
பித்திருக்கும் "
உலக"த்தில்
காட்சி அளிக்கி
மங்கள

[இடது புறம் :]

யூ. ஏ. வி. தயாரித்து
ம் "கித காந்தி" யில்
ஒரு காட்சி.

★

வலது புறம் :

ருஷ்ண பக்தி" படத்தில்
லக்ஷ்மி, சின்னப்பா,
ஆழ்வார் குப்புசாமி.

தண்டுசி

இடது புறம் :

ாள்" அம்மி மிதிக்
(ஜீவரத்தினம்,
கோவிந்தன்)

★

வலது புறம் :

களில் ஓட ஆரம்
கும் "வேதாள
த்தில் படுத்தபடி
அளிக்கிறார் யோக
மங்களம்.

"முதல் மனைவி இருந்தாலென்ன ;
இவளையும் (யோக மங்களம்)
மணந்துகொள்ளுகிறேன்" என்று
சின்னப்பா கூறுகிறார் போலும்.
(சுதர்சன்)

பாட்டில் பிரசித்தி பெற்ற பி. ஏ.
பெரியநாயகி நடிப்பிலும் பிரமாத
மான பெயரைப் பெறுவாராம்
"கீத காந்தி"யில்.

நாடகமேடையில் புகழ் மிக்க வர
தாச்சாரி "மஹா பலி" படத்தில்
பலிச் சக்கரவர்த்தியின் வேஷத்
தை நன்கு நடித்திருக்கிறாராம்.

* வேண்டாம் இந்த மோஹம்!

ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆகஸ்டு 15-ந் தேதி விடுதலை முரசு கொட்டி விட்டோம். உண்மையில் வெள்ளைக்காரன் வேளியேற எண்ணினாலும், நம் தமிழ் நாட்டுத் திரைப் படங்கள்தான் அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு விட மாட்டேனென்கின்றனவே!

வந்த தமிழ்ப் படங்களில் எதில்தான் ஐரோப்பிய நடனம் இல்லை? தேகத்தின் பருமனைத் தெரியக்காட்டி, உடம்பைக் குலுக்கி, எவ்வளவு உயரம் கால்களை தூக்க முடியும் என்பதையும் பரீட்சித்துக் கொண்டே 'பாரிச வாயு' தாக்கியவர் போல் அங்கங்களை விறைத்து மடக்கும் இந்த ஆபாச ஐரோப்பிய நடனம் நம் தமிழ் நாட்டுத் திரைப் படங்களுக்கு அவசியந்தானு? தமிழ் நாட்டு சரித்திர, சமூக, புராணக் கதைகளுக்கும் ஐரோப்பிய நடனத்திற்கும் 'ஸ்தானப் பிராப்தி'யாவது உண்டா? நம் திரைப்படத் தயாரிப்பாளர்கள் அவசியம் இது பற்றி சிந்திக்க வேண்டும். பாரத நாட்டின் பண்டைய கலையான பரத நாட்டியம் இல்லையா? அல்லது பார்ஸி, மணிபுரி, கதக் நடனங்கள் இல்லையா?

இது நவீன சமீபத்தில் வெளிவந்த தோர் படத்தில் ஆரம்பம் முதல் கடைசி வரை பின்னணி கீதம் ஐரோப்பிய மோஸ்தரில் இருந்தது. இந்திய இசைகளான கர்நாடக, இந்துஸ்தானி வழிகளில் பின்னணி அமைக்க முடியாதா? அல்லது இவ் விரண்டையும்விட ஐரோப்பிய கீதம் உயர்ந்ததா?

நடனம், உடை, பின்னணி, பாட்டு—இவைகளில் இந்த மேல் நாட்டு மோகம் வேண்டவே வேண்டாம் நமக்கு.

[பரிசு பெற்ற கடிதம்:—எழுதியவர் தம் பெயரையும், விலாஸத்தையும் தெரிவிக்கவும். —ஆசிரியர்]

மதத்தைப் பழிக்காதே

படத்தைப் பலதரப் பட்ட மக்கள் பார்க்கின்றனர். அதில் எந்த மதத்தையும் பழிக்கும் காட்சியை அநுமதிக்கக் கூடாது. சில படங்களில் இந்து மத பக்தி, ஆசார சடங்குகளை பரிகசிக்கும் வகையில் ஹாஸ்யத்திற்காகப் புகுத்தியிருக்கின்றனர். இது வருந்தத் தக்க விஷயமாகும். கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களைப்பழித்துப் படங்களைத் தயாரித்திருந்தால் அவர்கள் சும்மா விட்டிருப்பார்களா? பரந்த நோக்கங்கொண்ட இந்துக்கள் இவ்விஷயத்தில்பராமுகமாக இருக்கின்றனர் என்று யாரும் எண்ணி விடக் கூடாது. புலி பதுங்குவது எல்லாம் பாய்வதற்கு என்பதைப் படத்தயாரிப்பாளர்கள் அறிய வேண்டும். இனி இத்தகைய படங்கள் தயாரிக்கப்பட்டால் மக்களிடையே எதிர்ப்பு ஏற்படும் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

எந்த மதத்தையாவது, புராணத்தையாவது, பொது ஜனங்கள் அவற்றிடம் கொண்டுள்ள மதிப்பையும்,பக்தியையும் குறைப்பதாகவோ, எந்த மத குருக்களையோ, மத ஆசார சடங்குகளையோ, பரிகசிக்கக்கூடிய காட்சிகள் ஹாஸ்யத்திற்காகவோ, வில்லன்களுக்காகவோ கதையில் அமைத்துப் படம் தயாரிக்கக் கூடாது. இதற்காக சென்னை அரசாங்கம் சமீபத்தில் இயற்றியுள்ள சட்டத்தை வரவேற்கிறேன்.

அன்பு, அஹிம்சை, சத்தியம், சகோதரத்வம், தர்மம், நீதி, ஈகை, கற்பு, ஆண்மை, வீரம், பரோபகாரம் இவைகள் போன்ற உயர்ந்த கருத்துகள் நிறைந்த கதைகளை, மக்களுக்குப் பயன்படும் வகையில் சித்திரித்துப் படங்களை எடுத்து, கலைக்கும் தேசத்திற்கும் சேவை செய்யும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

—செ. இராமலிங்கம்,
திருநெல்வேலி டவுன்.

எங்கள் ஊர் தியேட்டர்

எங்கள் ஊரில் கிருஷ்ணா டாக்கீஸ் என்று ஒரே ஒரு தியேட்டர்தான் இருக்கிறது. இப்படி ஒரு தியேட்டராய் இருப்பதை நிர்வாகிகள் எவ்வளவோ நன்றாக வைத்திருக்கலாமல்லவா? ஆனால் தியேட்டர் நிர்வாகிகள் பணத்தின் மீது கண்ணாக இருக்கிறார்களே தவிர பொது ஜனங்களின் நன்மையைக் கருதுவதாகத் தெரியவில்லை.

இத் தியேட்டர் ஆரம்பித்து நான்கு வருஷங்கள் ஆகின்றன. பிறகு முன்னேற்றமே கிடையாது. ஆரம்ப காலத்தில் ஏற்படுத்திய தரைதான் இப்பொழுதும் இருக்கிறது. தியேட்டர் நிர்வாகம் தான் இப்படி என்றால் பொது ஜனங்களும் மோசமாக நடந்து கொள்ளுகிறார்கள். அவர்கள் உட்காரும் இடங்களிலேயே எச்சில் துப்பி வைக்கிறார்கள்.

இத் தியேட்டரில் எட்டு மின்சார விசிறிகள் இருக்கின்றன. ஆனால் அதில் ஓடுவது ஒன்றுகூட இல்லை. குடி தண்ணீர் குழாய் ஒன்று. பாதி நாள் குழாய் ரிப்பேராக இருக்கும்.

இக் குறைகளைத் தியேட்டர் நிர்வாகிகள் போக்க வேண்டும். பொது ஜனங்களும் சரிவர நடந்துகொள்ள வேண்டும்.

—டி. எஸ். மாரியப்பன்,
அய்யம்பேட்டை.

இதுவும் தியேட்டரா!

எங்கள் ஊரில் "கருவேப்பிலைக் கன்று" மாதிரி ஒரே ஒரு சினிமா தியேட்டர் தான் இருக்கிறது. இங்கு நடக்கும் அட்டூழியங்களுக்கோ அளவு இல்லை. பழைய பாடாவதிப் படங்களைக் காட்டி கொள்ளை லாபம் அடிக்கும் தியேட்டர்களில் இது முதல் தாம்பூலம் வாங்கும். வேறு டூரிங் சினிமா போட்டிக்கு வந்தால்தான் இங்கு புதுப் படம் காட்சியளிக்கும்; அதுவும் பாடாவதிப் படமாக இருக்கும்!

இந்த தியேட்டரில் டபிள் புரஜெக்டர் கிடையாது. படத் தெளிவு படுமோசம். சப்தமோ கேட்க வேண்டியதில்லை.

இந்த தியேட்டரில் போதுமான மின்சார விசிறி கிடையாது. மின்சார விசிறியோ (சுமார் 800-பேர் உட்காருமிடத்திற்கு) ஒன்றுதான் இருக்கிறது. இன்னொரு பெருங்குறை என்னவென்றால் தியேட்டருக்கு வெளியில் வைக்கும் கார்டுகளை, டிக்கெட் வாங்கிக் கொ

நீல மாளிகை

மதுரையில், மனதிற்குத் திருப்தி அளிக்கும்

பட்டு, ஜரிகை, நூல் ஜவுளிகள்

கண்ணைக் கவரும் ரகங்களில் கிடைக்கும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்.

கே. எஸ். பெருமாள் முதலியார் & சன்ஸ்

3/4 தெற்கு சித்திரை வீதி, மதுரை.

உள்ளே செல்பவர்களுக்கு கேட்க வசதி செய்யப்படவில்லை.

இவ்வளவு பெருமையுள்ள தியேட்டரின் பெயர் "ஸ்ரீ கோமதி டாக்கீஸ்" இனிமேலாவது தியேட்டர் நிர்வாகிகள் சீர்திருத்தம் செய்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

எஸ். ஒய். தமயந்தி சுந்தரம்,

அருப்புக்கோட்டை.

சென்னை பிரபாத்

சென்னையில் உள்ள தியேட்டர் என்றால் நல்லதாக இருக்கும் என்றே எல்லோரும் எண்ணுவர். நானும் அப்படித் தான் எண்ணினேன். இதே எண்ணத்துடன்தான் சென்னை பிரபாத் தியேட்டருக்கும் படம் பார்க்கச் சென்றேன்.

தியேட்டரின் வெளிப்புறம் நன்றாக இருந்தது. உள்ளேயும் ,நன்றாகவே இருக்கிறது சில சௌகரியங்களும் இருக்கின்றன. ஆனால் டிக்கெட் கொடுக்கும் இடமோ படுமோசம். மாட்டினிக்குப் படம் பார்க்கப் போனால் 2-6-0 வகுப்புக்குங் குறைவாக டிக்கெட் வாங்க வேண்டுமானால் மழையானாலும், வெய்யிலானாலும் வெளியில்தான் சாக வேண்டும். அத்துடன் கள்ள மார்க்கெட் என்பது இத் தியேட்டர் குண்டர்களின் பரம்பரைச் சொத்து என்றே சொல்ல வெண்டும். டிக்கெட் வாங்க க்யூவில் நிற்பவர்களில் பாதிப் பேர்கள் கள்ள மார்க்கெட் வியாபாரிகளாகவே இருப்பார்கள். போலீஸ் காரர்களோ, தியேட்டர் நிர்வாகிகளோ இதைப் பார்த்தால்கூட சும்மா இருக்கிறார்கள்.

முதன் முதலாக டிக்கெட் கொடுக்குமிடத்தில் நிழலுக்காகவும், மழை வந்தால் ஒண்டவும் கூறை போட வேண்டும். காஸினோ தியேட்டரில் உள்ளது போல் டிக்கெட் வாங்கியவர் பிறகு வெளியே வர முடியாதபடி ஏற்பாடு செய்யவேண்டும். இதை தியேட்டர்காரர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

—"முரளிதரன்"

சென்னை.

நீலா டாக்கீஸ்

எங்கள் ஊரில் ஒரு தியேட்டர் உள்ளது. அதன் பெயர் நீலா டாக்கீஸ். சப்தமோ சரியாய் கேட்பதில்லை. படமோ ஆடுகிறது. எங்கோ இருக்கிறது. புரொஜெக்டர் மோசம். புதிய படமாய் இருந்தாலும் ஒரே மங்கலாய்த்தான்

முதல் மனிதர் :—"என்ன ஸார்; இந்த தியேட்டரிலே இரண்டாவது காட்சி எப்பொழுது ஆரம்பமாகிறது?"

இரண்டாவது மனிதர் :—என்னய்யா, இது தெரியாதா? முதல் காட்சி முடிந்த உடனேதான!

இருக்கும். சப்தம் குறையும்; கூடும். மின்சார விசிறிகளோ போதாது.

இந்த நிலையில் பெரும்பாலும் வரும் படங்களோ மிக மிகப் பழமையானவை. பல ஆண்டுகளுக்கொரு முறைதான் கொஞ்சம் நல்ல படங்கள் வருகின்றன. ஒரு படம் திரை உலகிற்கு வந்து, குறைந்தது நாலாண்டுகள் ஓடிய பிறகு தான் இங்கு வருகின்றன. காரணம் பட முதலாளிகள் படம் கொடுப்பதற்கு அஞ்சுகிறார்களாம் தியேட்டரின் மோசமான நிலைமையைப் பார்த்து. தியேட்டரின் நிலைமையையும், மக்கள் நலனையும் கருதாமல், மேலும், மேலும் பணம் சம்பாதிக்க வேண்டும்என்று எண்ணுகிறார் போலும் இக் கொட்டகையின் சொந்தக்காரர். இனிமேலாவது தியேட்டரை சீர் செய்து, புதிய படங்களை காண்பித்து மக்களின் ஆதரவைப் பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

—சினிமா ரசிகன்,

பட்டுக்கோட்டை.

புகை பிடிக்கும் அன்பர்களுக்கு

சமீபத்தில் பம்பாய் நகரப் போலீஸ் கமிஷனர் "சினிமாத் தியேட்டர்களினுள், புகை பிடிப்பது, மக்கள் நலத்தைப் பாதிக்கின்றது. ஆகையால் தியேட்டர்

களில் புகை பிடிக்கக் கூடாது. என்று ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

சென்னை நகர மேயர் டாக்டர் ஆ. கிருஷ்ண ராவ், பாரகன் தியேட்டரை திறந்து வைத்த சமயத்தில் "தியேட்டருள் புகை பிடிப்பதால் க்ஷயரோகம் உண்டாக ஏதுவாகின்றது. ஆகையால் பொது மக்கள் கூடும் நிலையங்களில் புகை பிடித்தல் தவறு" என்று பேசியுள்ளார்.

புகை பிடிக்கும் அன்பர்கள் சிந்திக்க வேண்டும், மக்கள் தேக ஆரோக்கியத்தைப் பாதிக்கின்றது என்பதை அறிந்த பிறகாவது, அவர்கள் தியேட்டருக்குள் புகை பிடிக்காமல் இருக்க வேண்டும்.

பம்பாய் சர்க்காரைப் போல் சென்னை சர்க்காரும் இச் சட்டத்தைக் கொண்டு வருமுன் பொது ஜனங்களே திருந்தி நடப்பது நலம்.

— என். லோகநாதன்,
திருநெல்வேலி.

அதிவாயத்திலும் அநியாயம்

மதுரைமா நகரிலேயே மோசமான தியேட்டர் ஒன்று உண்டென்றால் அது இம்பீரியல் சினிமாதான் என்று சினிமா பார்த்துவரும், ஒவ்வொரு மதுரைவாசியும் கூறுவார்.

இந்த தியேட்டருக்கு பெரும்பாலும் இங்கிலீஷ் சீரியல், அல்லது ஹிந்தி—சண்டைப் படங்களே வரும். அந்தப் படங்களும் அநேகமாக அந்த தியேட்டருக்கு வந்துபோனதாகவே இருக்கும். ஆனால் படம் ஆரம்பத்தன்று 'மதுரைக்கு இதுவே முதல் தடவை" என்று விளம்பரஞ் செய்வார்கள்.

உதாரணமாக, "ஜங்கில் கேர்" என்ற படம் இந்த தியேட்டருக்கு ஒரு வருஷத்திற்குள் 3 தடவை வெவ்வேறு பெயருடன்-அதாவது 1. வனப் பெண் 2. வன ராணி 3. வன குமாரி—என்ற விளம்பரத்துடன் காட்டப் பட்டது.

இப்படி மாறு பெயர்கள் கண்டு பிடிக்க எந்த அகராதியினுடைய உதவியை நாடினார்களோ ஷை தியேட்டர் நிர்வாகிகள்! ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்! 'படம் பார்த்தது தானே, என்று ஆத்திர மடைந்த ஜனங்கள் சப்தம் செய்ய ஆரம்பித்தால் தியேட்டர் நிர்வாகிகளால் வளர்க்கப்படும் குண்டர்கள், குறிப்பிட்ட நபர்களை பிடித்து, அடித்து, துன்புறுத்துகிறார்கள்.

கடைசியில் "படம் பார்ப்பவர்களுக்கு இடஞ்சல் செய்தான், தியேட்டரில் கலகம் செய்தான்" என்று பொய் சொல்லி குற்றம் சாட்டப் படுகிறது. இந் நிலைமை நீடிக்கக் கூடா தென்பதே என் விருப்பம்.

— எம். ஆர். மணி,
மதுரை.

ஒரு தியேட்டர் கட்டுங்கள்

எங்கள் ஊரிலோ அல்லது அடுத்த ஊரிலோ, நாடகக் கொட்டகையோ சினிமாத் தியேட்டரோ ஒன்றுமில்லை. ஆகையால் பத்து மைல் தூரம் 'பறந்து' சென்றுதான் படம் பார்க்க வேண்டியிருக்கின்றது. பணச் சுருக்கத்துக்காகப் பஸ்ஸிலோ ரயிலிலோ போகாமல் வாடகைக்கு ஓர் சைக்கிளை இருவர் சேர்ந்து அமர்த்திக்கொண்டு போகிறோம். பத்து மைல் தூரத்தையும் சோனகக் காற்றுக் காலத்தில் வடக்கேயிருந்து தெற்கு முகமாய் எதிர் காற்றில் போவதென்றால் இடுப்பு வலியும் நெஞ்சு வலியும் தான் ஏற்படுகிறது. உடம்புதான் கஷ்டப்படுகிறதே மனமாவது திம்மதியாகப் போகிறதோ என்றால் அதுவும் இல்லை. சைக்கிளில் 'டபிள்' போவதால் எங்கே மூலை முடக்குகளிலிருந்து போலீஸ் காரர்கள் வந்து பிடித்து விடுவார்களோ என்ற கிலி. இப்படியாகப் போய் படம் பார்த்து விட்டோம். நல்ல இருட்டு. சைக்கிளுக்கு வெளிச்சம் இல்லை. டவுன் நீங்கும் வரையில் சைக்கிளையும் உருட்டிக்கொண்டு நடக்க வேண்டும். அப்புறம் 'இனிமேல் போலீஸ்காரர்கள்வரமாட்டார்கள்,என்ற பயம் சற்று விலகிய பிறகு, இருவரும் சைக்கிளில் ஏறி வீடு திரும்பவேண்டி வருகிறது. காட்டு வழியில் ஏதாவது ஒரு உருவத்தைக் கண்டுவிட்டாலோ போதும், கிலி வேறு பிடித்துக் கொள்கிறது.

இப்படியாகப் போய் சினிமாப் பார்த்துத் திரும்புவது நான் ஒருவன் மட்டும் அல்ல. என்னைப் போல் அநேக வாலிபர்கள் துன்புறுகின்றனர். ஆதலால் எங்கள் ஊரிலோ அல்லது எங்கள் ஊருக்கு அண்மையிலோ ஒரு சினிமா தியேட்டரை ஆரம்பிக்கும்படி பொதுஜன நன்மையைக் கருதுபவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

— முத்து,
ஊசிமலை.

டே சேஷு! இங்கேயே ஸ்ருதி சேத்துடு'டான்னு நாலரைக்கே ஆரம்பிச்சுடணும்
தம்பூரா.....பாலகு ஜா.... ....வெற்றிலைப்பெட்டி,....இது ....அது.....ங்.....எல்லாம்... சரியாயிருக்கு.....
...ங்... சீக்கிரம் ஆகட்டும்... பத்து நிமிஷம்தானிருக்கு,...
நாங்க ரெடி ஆரம்பிக்கலாம்... ஐயர்வாள் என்ன தேடறேள்
என்... என்ன.... ....மறந்திட்டிங்க...
முட்டாள்! எல்லாம்...... எடுத்து வச்சீயே..... பொடி டப்பியை ஏண்டா மறந்தே?

நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும் என்பது பழைய பழமொழி ஆனால் பட முதலாளிகள் ஒன்று நினைத்தால் நடப்பது மற்றொன்று என்பது சினிமாத் தொழிலுக்கு ஏற்ற மொழியாயிருக்கிறது.

* * *

பல பட முதலாளிகள் பிரமாதமான வசூலை எதிர் பார்த்துத் தயாரிக்கும் படங்கள், ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் ஓடிவிட்டு "வெற்றிகரமாக வாபஸ்" ஆகிவிடுகின்றன. "கையைக் கடிக்காமல் போட்ட முதல் திரும்பி வந்தாலே போதும்" என்ற பயத்துடன்வெளியிடப்படும் சிலபடங்களோ எதிர்பாராமல் அமோகமான ஆதரவைப் பெற்று விடுகின்றன.

* * *

பவளக்கொடி கதையில் என்னதான் இருக்கிறதோ தெரியவில்லை. என்ன இருந்தாலும் கொடியல்லவா? அந்த கதைக்குதான் சமீப காலத்தில் எவ்வளவு போட்டி! என்ன கிராக்கி பாருங்கள்!

* * *

எந்த நேரத்தில், சென்னை திருவல்லிக்கேணியில் முளைத்த பாண்டுரங்கா பிக்சர்ஸார் பவளக்கொடியைப் படமாக்க நினைத்தார்களோ தெரியாது! அந்தக் கம்பெனி என்னவோ இருக்கும் இடம் தெரியாமல் போய் விட்டது. ஆனால் அந்தக் கதைக்கு ஒரு திடீர் "மௌஸ்" ஏற்பட்டு விட்டது.

* * *

பவளக்கொடியைப் படமாகத் தயாரிப்பதற்காக ரகஸியமாகத் திட்டம் போட்டு வைத்திருந்தார் கணேஷ் ஸ்டுடியோ முதலாளியான சிவன் செட்டியார். ஆனால் ஏ. வி. மெய்யப்பச் செட்டியாரின் பவளக்கொடி விளம்பரம் இதை முந்திக் கொண்டது.

* * *

பண வசூலை அளிக்கும் படங்களைத் தயாரிப்பதில் பெயர் பெற்ற ஸ்ரீராமலு நாயுடு சும்மாயிருப்பாரா? கன்னிகாவைத் திரையிட்ட சூட்டோடு பவளக்கொடியைத் தமது அடுத்த படமாக அறிவித்தார். அதோடு நின்றுவிடாமல் படத் தயாரிப்பையும் மும்முரமாக ஆரம்பித்தார்.

* * *

நினைத்த காரியத்தைச் செய்தே முடிக்கும் "மேனா" தான் பவளக்கொடி முயற்சியைக் கைவிட்டு விடுவாரா? தமது வேதாள உலகம் படத்தில் பவளக்கொடியை இன்னிசை நாடகமாகப் புகுத்தி விட்டார்.

* * *

"மேனா, தாம் பவளக்கொடியை இன்னிசை நாடகமாகத் தயாரித்து வேதாள உலகத்தில் சேர்க்

கப் போவதாக நினைத்திருப்பாரா? அல்லது 'மேனா' இப்படிச் செய்வார் என்று ஸ்ரீராமுலு நாயுடுதான் எதிர் பார்த்திருப்பாரா? இரண்டுமில்லை.

* * *

இந்த சம்பவம் நமக்குப் பல பழைய "நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று" நிகழ்ச்சிகளை கவனத்துக்குக் கொண்டு வருகின்றன.

* * *

ஒரே நகரத்தில் ஒரே தியேட்டரில் அதிகமான காலம் ஓடிய முதல் படம் என்ற பெருமை ராயல் டாக்கீஸாரின் சிந்தாமணியைச் சேர்ந்தது. ஆரம்பத்தில் அந்தப் படத்தில் பில்வமங்களாக நடிக்க சிறுகளத்தூர் சாமா தான் ஏற்பாடாகியிருந்தது என்பது அநேகருக்குத் தெரிந்திராது. ஆனால் நடித்தது எம். கே. டி. பாகவதர் என்பதுதான் எல்லோருக்கும் தெரியுமே.

* * *

சினிமா ரஸிகர்கள் பலரது ஒரு மா பெரும் விருப்பம் என்ன தெரியுமா? தியாகராஜ பாகவதரும், எம். எஸ். சுப்புலக்ஷ்மியும் ஒரே படத்தில் நடித்து அதை தாங்கள் கண்டு களிக்க வேண்டும் என்பது தான். "அவர்கள் சேர்ந்து நடித்தால் எப்படியிருக்கும்? ஏன் சேர்ந்து நடிப்பதில்லை?" என்றெல்லாம் இதுவரை ஆயிரக்கணக்கான கேள்விகள் கேட்கப்பட்டு விட்டன. ரஸிகர்கள் எதிர்பார்க்கும் அப்படிப்பட்ட ஒரு சம்பவம் ஒரு சமயம் உண்மையில் நிகழ்வதாகவே இருந்தது. எம். எஸ். எஸ். நடித்த சகுந்தலையில் பாகவதர் தான் துஷ்யந்தனாய் நடிப்பதாக இருந்தது என்ற தகவல் நேயர்களுக்கு மிகுந்த ஆச்சர்யத்தை அளிக்கும்.

* * *

ஜெமினி சந்திரலேகா விஷயமும் எதிர் பாராதது தான். அப்பொழுது ஜெமினியில் நிரந்தர நடிகையாக இருந்த கே. எல். வி. வஸந்தாவே சந்திரலேகாவாக நடிப்பதாய் இருந்தது. அதற்காக அவருக்கு 'மேக்-அப்' போட்டு எடுக்கப் பட்ட ஒரு 'ஸ்டில்' கூட (பர்மாகாரியின் உடையில், கையில் பர்மாக் குடையுடன்) மூவர்ணப் படமாக "ஆனந்த விகடன்" தீபாவளி மலரில் வெளிவந்தது சிலருக்கு நினைவிருக்கலாம். அப்பொழுது இப்படத்தை "முருகதாஸா" தான் டைரெக்ட் செய்வதாக இருந்தது.

* * *

ஜெமினி ஞானசௌந்தரி விஷயத்திலும் அவர்கள் நினைத்தது ஒன்று நடந்தது ஒன்றாகி விட்டது. ஞானசௌந்தரியாகக் கூட வஸந்தா தான் நடித்திருக்க வேண்டும். கைகள் வெட்டுண்ட காட்சிகளில் அவர் எப்படித் தோற்றமளிக்கிறார் என்பதைப் பார்ப்பதற்காக அந்த பாகத்தை மட்டும் சில அடிகள் நீளம் படமெடுத்து மாதிரி பார்த்தார்கள்.

* * *

அது மட்டுமா? ஞானசௌந்தரியை தெலுங்கிலும் ஏககாலத்தில் படமாக்கத் திட்டம் போட்டிருந்தார்கள். அதற்கெனவே வஸந்தா தெலுங்கு பாஷையைக் கற்றுக் கொண்டார். தெலுங்குப் பரீக்ஷை கூடப் பாஸ் பண்ணியதாக ஞாபகம். ஆனால் கடைசியில் நடந்திருப்பதெல்லாம் நேயர்களுக்குத் தெரியுமே.

* * *

நாம் இருவர் புகழ் ஜோடியான மஹாலிங்கம், டி. ஏ. ஜெயலக்ஷ்மி—இவர்களைக் கொண்டே வேதாள உலகத்தையும் தயாரிக்க வேண்டுமென்றுதான் 'மேனா' ஆரம்பித்தார். ஜெயலக்ஷ்மி தோன்றும் சில கட்டங்கள் கூடப் படமாக்கப் பட்டன. ஆனால் அந்தப் படத்தின் கதாநாயகியாகும் பாக்கியம் முடிவும் யோக மங்களத்திற்கல்லவோ வாய்த்திருக்கிறது!

* * *

பாக்டா பிக்சர்ஸ் மங்கையர்கரசி ஜெயம்மாவைக் கதாநாயகியாகக்

கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இப்பொழுதோ கண்ணாம்பா கதாநாயகியாய் நடிக்கிறார். படம் முடிந்து திரைக்கு வருவதற்குள் இன்னும் என்னென்ன மாறுதல்கள் அடையுமோ?

* * *

தியாகராஜ பாகவதரின் பாட்டுகள் ராஜயோகிக்காக ஒலிப்பதிவாகிக் கொண்டிருந்த சமயம் துரதிருஷ்ட வசமாக அவர் சிறை செல்ல நேர்ந்தது. கே. ஆர். ராமசாமியைக் கொண்டு படத்தைத் தயாரித்து முடிக்க முயற்சிகள் நடைபெற்றன. அதற்குள் வழக்கு ப்ரிவி கவுன்ஸிலுக்கு வந்ததும, அந்த முயற்சிக்கும் முற்றுப்புள்ளி விழுந்தது. பாகவதர் விடுதலையாகி வந்த பின்னும் ராஜயோகி முன்னேற்றமில்லாது இருந்து வருகிறது.

* * *

கல்யாணமாக வேண்டிய ஒரு பெண்ணுக்கு வரன் தேடிக் கொண்டிருந்தான் ஒரு வாலிபன். சரியான வரன் கிடைக்காமல் போகவே தானே அந்தப் பெண்ணை மணந்து கொண்டான். அந்தக் கதையைப் போன்றதுதான் மிஸ் மாலினி விஷயம். கொத்தமங்கலம் சுபபு முதலில் படத்தில் நடிப்பதாகவே இருக்கவில்லை. சம்பத்தாக நடிக்க எஸ். வி. ஸஹஸ்ரநாமம் போன்ற பல நடிகர்களைப் பற்றி யோசிக்கப்பட்டது. 'யாரும் பொருத்தமாகப் படாததினால்' சுப்புவுக்கே கிடைத்தது அந்த வேஷம்!

* * *

நினைப்பது ஒன்று நடப்பது ஒன்று என்பதற்கு லக்ஷ ரூபாய் நக்ஷத்திரம் டி. ஆர். ராஜகுமாரியின் சினிமாப் பிரவேசமுய மிகவும் பொருத்தமாக இருக்கும். முதலில் காளமேகம் படத்தில் ராஜகுமாரியையே, சாரங்கபாணியுடன் ஹாஸ்ய பாகத்தில் நடிக்கச் செய்வதற்கு முயற்சிக்கப் பட்டது! ஆனால் அதிருஷ்டவசமாக அந்தப் பட சம்மந்தப்பட்டவர்கள் இந்த எண்ணத்தைக் கைவிட்டார்கள்.

* * *

அவ்வளவு தூரம் போவானேன். மின்மினியில் ரம்பாவாக காஞ்சனா நடிப்பதாக விளம்பரப் படுத்தப் பட்டது. ஆனால் இப்பொழுது வரும் விளம்பரங்களில் அவர் பெயரைக் காணோம். அவர் நடிப்பதாக இருந்த அந்த பாகத்தில் யோக மங்களம் நடித்து வருகிறார்.

* * *

நடிகர்கள் விஷயத்தில் தரன் இப்படி என்று இல்லை. குரல் இரவல் கொடுக்கிறவர்கள் விஷயத்திலும் இந்த எதிர் பாராத சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

* * *

மிஸ். மாலினியில் புஷ்பவல்லிக்காக பாடப்படும் "ஸ்ரீ சரஸ்வதி நமோஸ்துதே" என்ற பாட்டு முதலில் டி. கே. பட்டம்மாளால் பாடப்பட்டு ஒலிப்பதிவு செய்யப் பட்டது. ஆனால் அது அவ்வளவு 'திருப்திகரமாக அமையாததால்' குமாரி ரத்னத்தின் குரல் பிறகு பயன் பட்டது.

* * *

தமிழாக்கப்பட்ட ராம்ராஜ்யாவின் கடைசியில் பாடப்படும் "தாயின் மணிக்கொடி" பாட்டும் இதே போலத்தான் டி. கே. பட்டம்மாளால் முதலில் பாடப்பட்டதாம். ஆனால் படத்தில் வந்திருப்பதென்னவோ டி. எஸ் பகவதியின் பாட்டாகும்.

* * *

"சினிமாவே உலகம்; அடுத்த நிமிஷம் நடப்பதை யார் அறிவார்." என்று ஒரு புதுப்பாட்டை மஹாவின் கத்தைக் கொண்டு "கொலம்பியா" இசைத் தட்டாக வெளிவரப் போவதாய் விளம்பரம் ஆனபின், எம். எஸ். சுப்புலக்ஷ்மி "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" இசைத் தட்டுக்காகப் பாடி, அது "ட்வின்" இசைத் தட்டாக வெளி வந்தாலும் ஆச்சரியப்படுவதற்ில்லையல்லவா?

கே. ஆர். செல்லம்

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

லெல்லாம் நடித்து நல்ல பெயரைப் பெற்றிருக்கிருர்.

பூம்பாவை படத்தில் கொடுமை செய்யும் சிற்றன்னை வேஷத்தில் தோன்றி அவர் நன்கு நடித்திருக்கிருர். **நாம் இருவர், உதங்கர்** ஆகிய படங்களிலும் அவரது நடிப்பு நன்கு அமைந்திருக்கிறது.

இன்னொரு விஷயம் கவனிக்கத் தக்கது. **காரைக்கால் அம்மையார்** படத்தில் நடிக்க முற்பட்டது முதல் செல்லம் காமெடியன் கே. சாரங்க பாணியுடன் பெரும்பாலான படங்களில் ஜோடியாக ஹாஸ்ய பாகங்களில் நடித்திருக்கிருர். இப்படி அவர்கள் சேர்ந்து நடித்த பாகங்கள் வெற்றிகரமாய் இருப்பது கவனிக்கத் தக்கது.

சமீபத்தில் அவர் நடித்து முடித்திருக்கும் **பக்த ஜனு, வேதாள உலகம்** ஆகிய படங்கள் இந்த மாதத்தில் வெளிவந்திருக்கின்றன. **பக்த ஜனு**வில் அவரது நடிப்பு மிக அழகாக அமைந்திருக்கிறது. **வேதாள உலகத்திலோ** அவருக்கு குறும்பும் அசட்டுத்தனமும் நிறைந்த ஒரு புது மாதிரியான பாகம் அளிக்கப்பட்டிருக்கிறதாம். அதைத் தாம் திறம்பட நடித்திருப்பதாக செல்லம் நம்பிக்கையுடன் கூறுகிருர்.

முப்பது வயதான செல்லம் சினிமாவுக்கு மிக ஏற்றதான முக அழகையும், புருபுருப்புமிக்க அழகிய கண்களையும் உடையவர். மாநிற மேனியும், நடுத்தர உயரமும் உடைய அவரை தமிழ்ப் பட உலகின் "கண்ணழகி" என்று சொன்னல் அது மிகையாகாது.

செல்லத்தின் இரு புத்திரிகளும் இப்பொழுது ஹைஸ்கூலில் படித்து வருகிருர்கள். "இவர்களுக்கு கூடிய சீக்கிரத்தில் நல்ல வரன்களாகப் பார்த்து, லக்ஷணமாக கலியாணத்தைச் செய்து வைத்து, குடும்ப வாழ்க்கையில் ஈடுபடச் செய்யப் போகிறேன். நான் ஒருத்தி குடும்ப வாழ்க்கையை இழந்து விட்டுத் தவித்ததே போதும்" என்று உடைந்த மனதுடன் கூறுகிருர் செல்லம்.

செல்லத்தின் தகப்பனர் சமீப காலம் வரையில் அவரை கண்ணை இமை காப்பது போல் காத்து வந்தார். அவர் காலமான பின்னர் அந்தப் பொறுப்பை அவருடைய மூத்த சகோதரரான ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமியும், முன்பு பிரகதி ஸ்டுடியோவில் பிலிம் எடிட்டராக இருந்த ஸ்ரீ. பி. வெங்கட்டராமனும் ஏற்றுக் கொண்டிருக்கிருர். சுமார் மூன்று வருஷங்களுக்கு முன் செல்லம் ஸ்ரீ. வெங்கட்டராமனை மறுமணம் செய்துகொண்டு வாழ்க்கை நடத்தி வருகிருர்.

நடிப்புத் திறமை யில்லாத நடிக நடிகைகளைப் பற்றி எனக்கு கவலையே கிடையாது. ஆனல், உன்னதமாய் நடிக்கக்கூடிய நடிக, நடிகையர் விஷயத்திலோ எனக்கு எப்பொழுதும் தீராத ஒரு பெரும் குறை இருந்தே வருகிறது. ஒரு நடிகரிடமோ, நடிகையிடமோ நல்ல நடிப்புத் திறமை இருப்பதாகக் கண்டால் அவருக்கு நம் படமுதலாளிகள் பல தரப்பட்ட பாத்திரங்களைக் கொடுத்து, அவருடைய நடிப்புத் திறன் பூராவையும் பிழிந்தெடுத்து படங்களில் சேர்க்கத் தவறி விடுகிருர்கள் என்பதே என் குறை. இந்தக் குறையை அவர்கள் தீர்த்து வைக்க முற்பட்டார்களானல் அது சினிமாக் கலைக்கு மா பெரும் தொண்டாய் இருக்கும் அல்லவா?

பாகவதரின் ராஜமுக்தி

நமது விசேஷ நிருபர் பேட்டி

புனாவில் 'டிகானு' போட்டிருக்கும் பாகவதரைப் பற்றியும், அவருடைய "ராஜ முக்தி" படத்தைப் பற்றியும் "குண்டூசி" நேயர்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். "குண்டூசி" பிப்ரவரி இதழில் வெளியாகி யிருந்த விசேஷக் கட்டுரையைப் படித்த நேயர்கள் பலர் தங்கள் சந்தேகம் ஓரளவு தீர்ந்ததாகத் திருப்தியும், நன்றியும் தெரிவித்திருந்தார்கள்.

ஆனால் மேற்படி விசேஷக் கட்டுரையில் பாகவதர் ராஜமுக்தி மே மாதத்தில் வெளியாகும் என்று கண்டிருந்ததைக் குறிப்பிட்டு இப்போது பல நேயர்கள் மறுபடியும் கேள்வி கேட்கத் தொடங்கி யிருக்கிறார்கள்.

(1) படம் எப்போது வெளிவரும்?

(2) ராஜமுக்தியில் நடித்து வரும் ஸ்ரீமதி பானுமதி அபிப்பிராய பேதம் காரணமாகக் கம்பெனியிலிருந்து விலகி விட்டதாகக் கூறப்படுவது வாஸ்தமா?

(3) ராஜமுக்திக்குக் கதை வசனம் எழுதிக் கொண்டிருந்த "புதுமைப் பித்தன்" அகால மரணமடைந்ததால் படத்தின் வேலை தடைப்பட்டிருக்கிறதா? இது போல பல கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள்.

'குண்டூசி'யில் ஒரு விஷயம் வெளியானால் அது நூற்றுக்கு நூறு உண்மையாகத்தான் இருக்கும்—என்று நேயர்கள் உறுதியாக நம்புவதால் மேற்கண்ட மூன்று கேள்விகளுக்கும் பதில் அளிக்க வேண்டியது நமது கடமையாகிறது. எனவே, புனாவில் தங்கியுள்ள பாகவதரை நேரில் பேட்டி கண்டு வருவதென்று புறப்பட்டேன்.

முன் தடவை நான் மகாத்மாஜி மறைந்த ஜனவரி 30உ யன்று புனா போயிருந்தேன். இந்தத் தடவையும் அதே தேதியில் போகிறேன் என்பதை நினைத்ததுமே எனக்கு என்னவோ போல் இருந்தது.

ஆகவே நல்ல வேளையாக ஒருவருக்கும் ஒன்றும் நேராமல் இருக்க வேண்டுமே என்று பாகவதரின் இஷ்ட தெய்வமான முருகக் கடவுளை தியானம் செய்து கொண்டே இருந்தேன். முருகன் அருளால் எல்லாம் நல்ல சேதியாகவே கொண்டு வந்திருக்கிறேன். ஒருவருக்கும் ஒரு தீங்கும் நேரவில்லை. புனாவிலிருந்து ஹைதராபாத் மார்க்கமாக சென்னைக்கு வந்த ரயில் வண்டிகூட ரஸாக்கர்களிட மிருந்து பத்திரமாக தப்பி வந்து சேர்ந்து விட்டது!

புனாவை அடைந்ததும் முதல் காரியமாக பாகவதர் தங்கியிருந்த நரேந்திரா பிக்சர்ஸ் கட்டடத்திற்குள் புகுந்தேன். ஏதோ கலியாண வீட்டுக்குள் பிரவேசிப்பதைப்போல் இருந்தது. அந்தக் கட்டிடத்தின் விசாலமான ஹாலிலும், அறைகளிலும் நடிக நக்ஷத்திரங்

கள் பலர் ஒன்றுகூடி அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்தார்கள். சிறுகளத்தூர் சாமா, வி. என். ஜானகி, பேபி ராஜாமணி, ராஜகாந்தம், வீரப்பா, ராமச்சந்திரன் முதலியவர்களை ஒரே இடத்தில் ஒரே சமயத்தில் பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டியது. அன்று ஏதோ பெரிய தர்பார் சீன் ஷூட்டிங் நடக்கப் போவதாகவும், அதற்காகவே அத்தனை நக்ஷத்திர நடிகர்களும் அங்கே குழுமியிருந்தார்கள் என்றும் தெரிய வந்தது.

அந்த இடத்தில் ஸ்ரீமதி பானுமதியைக் காணவில்லை. உடனே எனக்கு நேயர்கள் கொண்டுள்ள சந்தேகம் ஒருவேளை நிஜம்தானோ என்று தோன்றியது. எனவே அருகிலிருந்த பொறுப்புள்ள ஆசாமி ஒருவரிடம் விசாரித்தேன்.

ஸ்ரீமதி பானுமதியின் பாகம் சென்ற மாதக் கடைசியோடு பூராவும் முடிந்து விட்டதென்றும், தம்முடைய பாகம் முடிந்த உடன் அவர் ஆகாய விமானம் ஏறி சென்னைக்குப் பறந்து சென்று விட்டார் என்றும் அந்த ஆசாமி பதில் கூறினார்.

பானுமதியின் பாகம் முடிந்ததோடு மட்டுமல்ல; படத்தின் வேலையும் அநேகமாய் முடிந்து விட்டதென்று அவர் கூறினார். "ரொம்ப சரி; படம் முடிவடைய ஏன் இத்தனை தாமதம்? மே மாதத்திலேயே வெளியாகி விடும் என்று கூறினீர்களே?" என்று கேட்டேன்.

"முதலாவதாக, மகாத்மாஜி மறைவுக்காக பிரபாத் ஸ்டுடியோவை நாலு வாரங்களுக்கு மூடி வைத்து விட்டார்கள். இன்னும் இதைப் போன்ற வேறு பல அசந்தர்ப்பங்களும் நேர்ந்து விட்டன" என்றார் அவர்.

"ஒருவேளை, 'புதுமைப்பித்தன்' மறைவினால் படப் பிடிப்பு வேலை பாதிக்கப்பட்டதோ?" என்று கேட்டேன். அதாவது, நானாகக் கேட்கவில்லை. நேயர்கள் "குண்டூசி"க்கு அனுப்பியிருந்த கேள்வியைத்தான் திருப்பி விட்டேன்.

"அதெல்லாமில்லை; அவர் மரணத்தால் எந்தவித இடைஞ்சலுமில்லை" என்று பதில் கிடைத்தது.

பாகவதர் இந்தப் படத்தில் சக்கைபோடு போட்டிருப்பதாகவும் அவர் கூறினார். பண்டரிபுரம் பாண்டுரங்கனுடைய பாதாரவிந்தத்தில் பாகவதர் பரம பக்தியுடன் பாடியிருக்கும் பாட்டு நம்மையெல்லாம் பக்திப் பிரவாகத்தில் மூழ்கடிக்கப் போகிறதாம். படம் பார்க்கும் நேயர்கள் கொட்டகைக்கு வெளியே வரும்போது இந்தப் பாட்டைத்தான் பாடிக்கொண்டு வருவார்களாம். பாகவதரின் பக்தி மயமான பாட்டுகளோடு ஸ்ரீமதி எம். எல். வசந்தகுமாரியின் இனிய கானமும் படத்தில் சேர்ந்திருக்கிறதாம்.

"படத்தில் இன்னும் என்ன விசேஷங்கள்?" என்று கேட்டேன்.

"பானுமதியின் நடனங்கள் இரண்டு இடங்களில் இருக்கின்றன. நடனமும் அதற்கேற்ற ஆடை அலங்காரங்களும் பார்ப்பவர் மனதைக் கவரும் முறையில் ரொம்பவும் விசேஷமாக அமைந்திருக்கின்றன.

"சிறுகளத்தூர் சாமா அவர்கள் பொறுக்கி எடுத்த மாதிரி ஒரு பாட்டைப் பாடியிருக்கிறார்.

"மற்றபடி ஸெட்டிங்குகளைப் பற்றி சொல்ல வேண்டுமா என்ன? படம் பிரபாத்தில் தயாராகிறது என்றால் 'ஸெட்டிங்' பிரமாதமாய்த்தான் இருக்கும் என்று சொல்லாமலே தெரிந்து கொள்ளலாமல்லவா?" என்று கூறி முடித்தார்.

"எல்லாம் சரிதான்; படத்தை பூராவாக விமர்சனம் செய்து விட்டீர்

களே? படம் எப்போது வெளிவரப் போகிறது?" என்று கேட்டேன்.

நரேந்திரா பிக்சர்ஸ் புரொடக்ஷன் மானேஜர் ஸ்ரீ. கோபால் ராவ் இருக்கிறாரே, அவர் ரொம்பவும் முன் யோசனைக்காரர் என்று தெரிகிறது. அவர் முதலில் படத்தை சுதந்திர தினத்தன்று வெளியிட திட்டம் போட்டிருந்தாராம். சில அசந்தர்ப்பங்களால் தள்ளிப் போய்விட்டதாம். இப்போது வினாயகசதுர்த்தி தினமாகிய செப்டம்பர் 6-ம் தேதி படத்தை வெளியிட திட்டம் போட்டிருக்கிறாராம். அவர்தான் அப்படி என்றால், பாகவதரின் தம்பி ஸ்ரீ. எம். கே. ஷண்முகமும் ரொம்ப துடியான பேர்வழியா யிருக்கிறார். அவர் ஒரு நிமிஷம்கூட சும்மா இருப்பதில்லை. அன்றாடம் வரும் தபால்களையும், மற்ற தினப்படி அலுவல்களையும் அவ்வப்பொழுதே தாமதமின்றி "டிஸ்போஸ்" செய்து வருகிறா. 'பெண்டிங்' என்பது அவருக்குக் கண்டிப்பாய்ப் பிடிக்காதாம். என்ன இருந்தாலும் 'பி. காம்' படித்தவரல்லவா? பாகவதருக்கு ஒரு பக்கம், மானேஜர் கோபால் ராவும் மறு பக்கம் தம்பி ஷண்முகமும் இருக்கும்போது என்ன குறை? அவர்கள் காட்டும் சுறுசுறுப்பைப் பார்த்தால், அவர்கள் போட்டுள்ள மூன்று வருஷத் திட்டப்படி கண்டிப்பாய் நமக்கு மூன்று படங்களை யல்ல—நான்கு படங்களைக் கூட கொடுத்து விடுவார்கள் போல் தோன்றுகிறது.

ஊருக்குத் திரும்பி வரும்பொழுது பாகவதரைப் பார்த்து, "போய் வருகிறேன், வேறு ஏதாவது விசேஷம் உண்டா?" என்றேன். "விசேஷமாய் ஒன்றும் இல்லை. தாங்கள் வந்ததுதான் விசேஷம். போய் வாருங்கள். (ஆகஸ்ட்டு) 15-ந் தேதி திருச்சி ரேடியோவின் மூலம் உங்களைச் சந்திக்கிறேன்" என்றார் பாகவதர். நான் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டேன்.

கீத காந்தி

காந்திஜி உபதேச சாரம்

ஜப்பான் குண்டு வீச்சின் காரணமாக தன் பெற்றோர்களை இழந்தவள் கிரிஜா என்ற யுவதி. சிதம்பரம் அண்ணாமலை சர்வ கலாசாலையில் படித்துக்கொண்டு வருகிறாள்.

கிரிஜாவின் தாத்தா ஒரு பெரிய குடும்பத்தை சம்ரக்ஷித்து வருகிறார். காந்திஜியின் பரம பக்தர் அவர். அனாதையான கிரிஜாவையும் தமது ஆதரவில் ஏற்று, அவர்தான் அண்ணாமலை சர்வ கலாசாலையில் சேர்த்தார்.

கிரிஜாவின் தாத்தா ஹிருதய நோயால் படுத்த படுக்கையாயிருக்கிறார். சென்னையிலுள்ள அவரைப் பார்க்க கிரிஜா புறப்பட்டு வருகிறாள்.

சென்னை எழும்பூர் ஸ்டேஷனை விட்டு வெளிவந்து கொண்டிருந்தாள் கிரிஜா. அவசர அவசரமாக ஓடிவந்தாள் ஒரு ஸ்திரீ. ஒரு கைக் குழந்தையை கிரிஜாவிடம் கொடுக்கிறாள். வண்டியில் தான் எதையோ வைத்து மறந்து வந்து விட்டதாகவும் அதை எடுத்து வரும் வரையில் குழந்தையை வைத்திருக்கும்படி கூறுகிறாள். கிரிஜாவின் பதிலுக்குக் காத்திருக்காமல் குழந்தையை அவளிடம் கொடுத்து விட்டு அந்த ஸ்திரீ கூட்டத்தில் மறைந்து போகிறாள்.

அந்த சமயம் எழும்பூருக்கு மற்றொரு வண்டி வந்து கொண்டிருக்கிறது. அந்த ஸ்திரீ ஓடிப்போய் அந்த ரயில் முன்னால் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ளுகிறாள். இதை அறியாத கிரிஜா அந்த ஸ்திரீயின் வருகைக்காக காத்துக் கிடக்கிறாள்.

கடைசியாக டிக்கெட் பரிசோதகர் ஒருவரும், ஒரு போலீஸ்காரனும் அங்கு வருகின்றனர். கிரிஜா அங்கு யாருக்காக காத்துக் கொண்டிருக்கிறாள் என்று அவர்கள் கேட்கின்றனர். அவள், தன் கையிலுள்ள குழந்தையை அதன் தாயிடம் ஒப்படைக்கவே தான் காத்திருப்பதாகக் கூறுகிறாள். அவ்விருவருக்கும் சந்தேகம் ஏற்படுகிறது. அவளை விரஸமான கேள்விகளெல்லாம் கேட்கின்றனர். பாவம்! கிரிஜா அப்பொழுது இருந்த நிலையில் தன்னிடம் குழந்தையைக் கொடுத்துப் போன ஸ்திரீ என்ன புடவை கட்டிக் கொண்டிருந்தாள் என்பதைக் கூட கவனிக்கவில்லை. அவர்கள், கிரிஜா தனக்குப் பிறந்த குழந்தையை இப்படி ஒரு கதை சொல்லி யாரிடமாவது கொடுத்துவிட முயற்சிப்பதாகச் சொல்லி நகைக்கிறார்கள்.

கோபம் கொண்ட கிரிஜா, குழந்தையின் தாய் வந்து கேட்கிறவரை குழந்தையை தன் தாத்தாவின் வீட்டில் பத்திரமாகவும் சௌக்கியமாகவும் வைத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் ஒரு டாக்ஸியில் ஏறிக்கொண்டு தன் தாத்தாவின் வீட்டிற்குக் கிளம்புகிறாள்.

சாந்தி நிலவிய அவள் தாத்தாவின் வீடு அவர் கீழே படுத்ததும் ஒரே குழப்பமாகி விடுகிறது. ஸ்திரீகளுக்குள் ஏற்பட்ட சிறு மனஸ்தாபம் பெரிய

கலகத்தை விளைவித்து விடுகிறது. இப்படிப்பட்ட சமயத்தில் கிரிஜா அங்கு வருகிருள். கிரிஜா சிதம்பரத்தில் காதல் விளையாட்டுகளில் ஈடுபட்டு அதன் பயனுக ஒரு குழந்தையைப் பெற்றுக் கொண்டு வந்திருப்பதாக ஸ்திரீகளால் குற்றம் சாட்டப்படுகிருள். கிரிஜா உண்மையை எடுத்துக் கூறியும், மன்ருடியும் பயனில்லை. அவர்கள் அதை நம்ப மறுக்கிருர்கள். ஏற்கனவே ஹிருதய நோயால் வருந்தும் அவள் தாத்தா கிரிஜாவின் இந்த இழிவான செய்கையைக் கேட்டால் மனமுடைந்து இறக்க நேரிடும் என்று கூறி, தாத்தாவைக் கூட பார்க்காதபடி கிரிஜா விரட்டப்படுகிருள்.

கிரிஜா கடும் வெய்யலில் நகரைச் சுற்றி அலைகிருள். பசியால் அழும் குழந்தைக்கு தெருக்குழாயிலிருந்து தண்ணிரைப் பிடித்துக் கொடுக்கிருள். மாலை நேரம் வந்ததும் கிரிஜா கடற்கரைக்குப் போகிருள்.

15-8-49

சுதந்திர தினத்தன்று
வெளிவந்துவிட்டது

பாபுஜி

சிறுவர்களுக்கான சிறந்த மாதப் பத்திரிகை

ஆசிரியர்:

"லால்ஜி" (ஜி.சதாசிவம்)

தனிப் பிரதி விலை அணு 2

வருட சந்தா(மலர் உள்பட)ரு. 1-8-0

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் மட்டும் எழுதவும். மாதிரிப்பிரதி வேண்டுவோர் 0-2-6 ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

"பாபுஜி" காரியாலயம்

38, நாகப்ப அய்யர் தெரு,

சென்னை 5.

கடற்கரையில் நீலக் கடலை நோக்கியபடி ஆழ்ந்த யோசனையில் இருக்கிருள். அவள் மகாத்மா காந்தியை, அவரது தத்துவங்களை எண்ணி எண்ணி வியந்து கொண்டிருக்கிருள். குளிர்ந்த காற்று அடிக்கிறது. பசியினுல் ஏற்பட்ட மயக்கமும் சேர்ந்து கொள்கிறது. அப்படியே கண் அயர்ந்து விடுகிருள். குழந்தையும் தூங்கி விடுகிறது.

நடு நிசி. பெரிய அலை ஒன்று வந்து அவர்களை இழுத்துப் போகிறது. மற்றொரு அலை கிரிஜாவை மட்டும் கரை கொண்டு வந்து சேர்க்கிறது. பொழுது விடிந்ததும் சில செம்படவர்கள கரையோரமாய்க் கிடந்த இறந்துபோன ஒரு குழந்தையைக் கண்டெடுக்கிருர்கள். வேறு சிலர் தன் நினைவற்றுக் கிடந்த கிரிஜாவைப் பார்க்கிருர்கள்.

உலகத்தோரின் முடிவு தெரிந்தது தானே! அவள் தன் குழந்தையை சமுத்திரத்தில் தூக்கி எறிந்து கொன்றதாகவே முடிவு கட்டி விடுகிருர்கள். போலீஸார் தங்கள் வேலையைச் செய்கிருர்கள். மாஜிஸ்டிரேட் தம் கடமையைச் செய்கிருர்.

கிரிஜாவுக்கு தன் நினைவு வருகிறது. ஆனல் எவ்வளவு வித்தியாசம் பேந்தப் பேந்த விழித்தாள். அவள் புத்தி ஸ்வாதீனத்தில் இல்லை. "கிரிஜா குழந்தையைக் கொன்ற குற்றவாளி" என்று தீர்மானிக்கப் படுகிறது. பிறகு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படுகிருள்.

காந்திஜியின் உபதேச சாரத்தை அடிப்படையாகக் கொண்ட இக்கதையின் தொடர்ச்சியை நீங்கள் படிப்பதைவிட வெள்ளித் திரையில் பார்க்கும்போது அதிகமாக ரஸிப்பீர்கள் என்பது நிச்சயம். இப்படம் அதி வேகமாய்த் தயாராகி வருகிறது.

சினிமா ஊழியர் சம்பள விகிதம்

தொழில் கமிஷனர் சிபார்சு

சென்னை தொழில் கமிஷனர் நகர சினிமா ஸ்டுடியோத் தொழிலாளர்களின் பிரதிநிதியையும், சொந்தக்காரர்களையும் கலந்து ஆலோசித்த பிறகு பின் கண்ட சம்பள விகிதங்களை சிபார்சு செய்துள்ளார்:—

ஆர்ட் இலாகா

தச்சு மேஸ்திரி—ரூ. 90—5—140. முதல் ரக தச்சர்--ரூ. 45-2-65. ஓவியர் (படுதாக்கள்)—ரூ. 60-2-100. ஸ்ப்ரே பெயிண்டர் ரூ. 25-1-35. மோல்டர்—ரூ. 80-4-120. உதவி மோல்டர் ரூ. 40-2-60. மோல்டர் கூலிகள்—ரூ. 20-1-25. மேக்கப் மேன் ரூ.—100-5-200. மேக்கப் மேன் உதவியாளர் ரூ. 30-1-35.

ஒலிப்பதிவு இலாகா

முதல் தர ஒலிப்பதிவாளர் ரூ.—60-3-90. இரண்டாம் ரக ஒலிப்பதிவாளர்—ரூ. 40-2-60. மூன்றும் ரக ஒலிப்பதிவாளர்—ரூ. 30-1-40. ஆபரேட்டர்—ரூ. 40-3-75.

ஒளிப்பதிவு இலாகா

முதல் ரக ஒளிப்பதிவாளர்—ரூ. 60-3 90. இரண்டாம்தர ஒளிப்பதிவாளர் ரூ. 40-2-60. லைட்டிங் கூலிகள் ரூ. 20-1 30. தலைமை எலக்ட்ரிஷியன்—ரூ. 60-6-100. உதவி எலக்ட்ரிஷியன் ரூ. 30-1-40. ஸெட் கூலிகள்—ரூ. 20-1-30. ஸெட் பொறுப்பாளி—ரூ. 40-3-70.

லாபரெட்டரி

தலைவர்—ரூ. 100-5-200. உதவித் தலைவர்—ரூ. 60-5-100. பில்ம் சுற்றுகிறவர் ரூ. 35-2-75. பில்ம் சுற்றுகிறவரின் உதவி ஆள் ரூ. 20-1-35. டெவலப்பர் ரூ. 30-1-40, பில்ம் கழுவுகிறவரின் உதவி ஆள் ரூ. 25-1-40. தொட்டி வேலையாளன் ரூ. 45-3-75. அவனது உதவி ஆள் ரூ. 30-2-50. பிரின்டர் ரூ. 75-5-150. உதவி பிரின்டர்—ரூ. 35-2-75. செக்கர் ரூ. 35-2-75. உதவி செக்கர் ரூ. 30-1-35. எடிட்டர் ரூ. 100-5-200. உதவி எடிட்டர் —ரூ. 40-2-70.

ஆபீஸ்

தலைமை குமாஸ்தா—ரூ. 80-5-125. குமாஸ்தா ரூ. 45-3-90. டைபிஸ்ட் ரூ. 45-3-90. ஆபீஸ் பையன் ரூ. 20-1-30.

காவல்காரன் ரூ. 25-1-25. தோட்டி ரூ. 20-1-25. தோட்டக்காரன் ரூ. 25-1-30. டிரைவர் ரூ. 40-2-60. ஆபரேட்டர்—ரூ. 45-3-75.

ரூபாய் நாற்பது வரை சம்பளம் வாங்குகிறவர்களுக்கு ரூபாய் இருபதும், நாற்பது ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு ரூ. 25-ம் பஞ்சப்படியாகக் கொடுக்க வேண்டும். விலை வாசிப் புள்ளி விபரங்கள் 260-லிருந்து 340 உள்ள வரை இந்த பஞ்சப்படி நிடிக்கும். பாதி நேரம் வேலை செய்கிறவர்களுக்கு பத்து ரூபாய் பஞ்சப்படி கொடுக்க வேண்டும். தற்பொழுது எங்கெல்லாம் அதிகமான சம்பளமும், பஞ்சப்படியும் கொடுக்கப்படுகிறதோ அதுவே நிடிக்கும்.

பிரதி வருஷமும் தொழிலாளர்களுக்கு ஒரு மாத போனஸ் கொடுக்கவேண்டும்.

ஒவ்வொரு "ஷிப்டி"ற்கும் ஒவ்வொரு இலாகாவிலும் குறைந்தது பின் கண்டபடி ஊழியர்கள் இருக்க வேண்டும். லாபரெட்டரியிலும், ஆபிஸிலும் தற்பொழுதுள்ள தொழிலாளர்கள் அப்படியே இருப்பார்கள்.

ஆர்ட் இலாகா :—

டைரெக்டர் 1, மோல்டர் அல்லது உதவி மோல்டர் 1, மோல்டிங் பையன்கள் 4, தச்சு மேஸ்திரி 1, தச்சர்கள் 6, தச்சர் கூலிகள் 6, ஸ்ப்ரே பெயிண்டர் 1, (படுதா) ஓவியர் 1, உதவி பெயிண்டர்கள் 2.

ஒலிப்பதிவு இலாகா :—

ஒலிப்பதிவாளர் 1, உதவி ஒலிப்பதிவாளர் 1, உதவியாளர்கள் 2.

ஒளிப்பதிவு இலாகா :—

ஒளிப்பதிவாளர் 1, முதல் உதவியாளர் 1, 2-ம் உதவியாளர் 1, லைட்டிங் பையன்கள் 8, ஸ்டுடியோ உதவியாளர் 2, தலைமை எலெக்ட்ரிஷியன் 1, எலெக்ட்ரிஷியன்கள் 2, ஸெட் பொறுப்பாளி 1, லேபரெட்டரிக்காக ஸெட்டில் 1.

எடிட்டிங் இலாகா :—

எடிட்டர் 1, எடிட்டிங் உதவியாளர் 1.

மேக்கப் இலாகா :—

மேக்கப்மேன் 1 மேக்கப் மேன் உதவி ஆள். 1.

விரைவில் வெளிவருகிறது
பி.யூ.சின்னப்பா
கண்ணாம்பா
யோகமங்களம்
முதலியோர் நடித்த
ராயல்
சுதர்சன்
டைரக்ஷன்: சுந்தர் ராவ் நட்கர்னி
வசனம்: இளங்கோவன்.
பாடல்கள்: பாபநாசம் சிவன்
RAYAL TALKIE
ராயல் டாக்கி டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ். மதுரை, பெஜவாடா & பெங்களூர்

டி. ஆர். ராஜகுமாரி எவ்வளவோ படங்களில் நாட்டியம் ஆடியிருக்கிறூர். இருந்தாலும், "கிருஷ்ண பக்தி"யில் அவரது நாட்டியம் தனிச் சிறப்புடன் விளங்குமாம்.

'சக்களத்தி வந்து விட்டாளே' என்ற கோபமோ?—ராயல் "சுதர்ஸன்" படத்தில் முதல் மனைவியாக நடிக்கும் கண்ணாம்பா

நடிப்பும் உண்மையும்

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

முயன்றார். ஆனால் அவன் நின்று, அவருடன் முகம் கொடுத்துப் பேசவில்லை. கடைசியில் அவர் தன் முயற்சியை விட்டு விட்டார். அவனாகவே வழிக்கு வரட்டும் என்று நினைத்துப் பேசாமல் இருந்து விட்டார். 'நாடகம் குந்தகம் இல்லாமல் நடந்தால் சரி' என்று அவர் எண்ணினார்.

"முப்பதாவது வாரம்", "முப்பத்தோராவது வாரம்" என்று, "பிரகலாதா" நாடகம் நடந்து கொண்டேயிருந்தது.

சென்னையிலிருந்து ஒரு பட முதலாளி வந்து அதைப் பார்த்தார். முதலியாருடன் பேசினார். நாடகத்தை அப்படியே சினிமாவாக எடுத்து விடுவதாகக் கூறினார்.

முதலியாரின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. முருகய்யனிடம் கூடக் கேட்காமல் பட முதலாளிக்குத் தன் சம்மதத்தைத் தெரிவித்து விட்டார். வேறு ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருவதாகச்சொல்லி விட்டு, அந்தப் படமுதலாளி போய் விட்டார்.

இந்த விஷயம்தெரிந்ததும் முருகய்யன் என்னென்னவோ எண்ணினான். அவன் மனம் கோபத் தீயினாலும், பொறாமைத் தீயினாலும் கருகிச் சாம்பலாகி விடும்போல் இருந்தது.

இனிமேல் தனக்குப் புகழ் மாலை வருவது சாத்தியமில்லை என்று அவன் நிச்சயித்துக் கொண்டான். பொது ஜனங்கள் அவனை அடியோடு மறந்து விட்டார்கள். 'இரணிய கசிபு', 'இரணிய கசிபு' என்றே எங்கும் பேச்சாக இருந்தது. சினிமாவுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டு விட்ட பிறகு குப்பய்யா கம்பெனி நாடகங்கள் எங்கே நடத்தப் போகிறது என்று முருகய்யன் திடமாக நம்பினான்.

தன்னால் முன்னணிக்கு வந்த ஒரு நாடகக் கம்பெனி தன்னைப் பின்னால் தள்ளி விட்டு முன்னேறுவதா என்று அவன் குமுறினான்.

"கூடாது! கூடாது!!" என்று அவன் மனம் அலறியது.

"உடனே இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டியது தான்!" என்று அவன் நெஞ்சம் கட்டளையிட்டது.

அவனுடைய முகம் உறுதியையும், கொடூரத்தையும் எடுத்துக் காட்டிற்று. "சரி! இன்றே செய்து விடுகிறேன்" என்று அவன் வாய் முணு முணுத்தது. இன்னும் என்னவெல்லாமோ பேசிக் கொண்டான். தன் கை விரல்களைப் பார்த்துக் கொண்டு, கோரமாகச் சிரித்தான் அவன்.

அன்றும் கொட்டகையில் ஏகக் கூட்டம் கூடியிருந்தது. காட்சிகள் 'மள மள' வென்று வந்து போய்க் கொண்டிருந்தன. காட்சிக்குக் காட்சி ஏற்பட்ட கரகோஷத்தைத் தவிர வேறு சப்தம் கொட்டகையில் ஏற்படவில்லை.

கடைசி காட்சியும் வந்து விட்டது. இரணிய கசிபு பிரகலாதனைப் பார்த்து, "இந்தத் தூணில் இருக்கிறானா?" என்று கேட்கிறான். சிறுவன், "ஆம்!" என்று தலையை ஆட்டுகிறான். உடனே இரணிய கசிபு தூணை உதைக்கிறான்.

தூணைப் பிளந்து கொண்டு நரசிம்மர் புறப்பட்டார். கொட்டகையில் இருந்தவர்கள் அவரது கண்களில் ஜொலித்த கோபத் தீயைக் கண்டு மெய் மறந்திருந்தார்கள். நரசிம்மர் இரணிய கசிபுவைத் தூக்கி மடியில் போட்டுக் கொண்டார்.

இரணிய கசிபு 'ஹோ!' என்று கத்தினான். நரசிம்மர் அவனுடைய உடலைக் கிழித்து, "சதைகளை" மாலைகளாக அணிந்து கொள்ளவில்லை. அவன் மார்பில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துணி மாலைகள் கீழே விழுந்து சிதறின. அவனுடைய உடலிலிருந்து உண்மையாகவே ரத்தம் பெருகத் தொடங்கியது. மறுக்ஷணம் இரணிய கசிபு-இல்லை, கிருஷ்ணசாமி — உயிரற்று மேடைமீது விழுந்தான். நரசிம்மர் வீர கர்ஜனை புரியவில்லை; பிரகலாதனை ஆசீர்வதித்து வரம் தரவில்லை. அதற்குப் பதிலாக முருகய்யன் தலைவிரி கோலமாக மேடையை விட்டுப் பாய்ந்து ஓடினான். பிரகலாத வேடதாரியும் பயந்து இன்னொரு பக்கம் ஓடினான். கொட்டகையில் ஒரே அமளி துமளி.

என் தந்தை அத்துடன் நிறுத்தினர். "பிறகு என்ன ஆயிற்று, அப்பா?" என்று ஆவலுடன் கேட்டேன்.

"பிறகு என்ன?......போலீஸ் வந்தது. முருகய்யனைத் தேடிப் பார்த்தது. அவன் தன் அறையில் இறந்து கிடந்தான். விசாரணையில், "பஞ்சாயத்தார்" முருகய்யன் மீது தெய்வம் வந்து விடவே ஆவேசத்தில் கிருஷ்ணசாமியைக்கொன்றதாகவும், பிறகு தன்னைத் தானே கொன்று கொண்டதாகவும் தீர்ப்புக் கூறினர்கள். ஊரில் என்ன சொல்லிக் கொண்டார்கள்தெரியுமா? 'நடிப்பு என்ருல் முருகய்யனின் நடிப்புதான். நரசிம்மர் வேடம் போட்டுக் கொண்டால் நரசிம்மராகவே மாறிவிட யாரால் முடியும்? ஐயோ, பாவம்!' என்று வருத்தப்பட்டார்கள். சுந்தரராஜ முதலியார் அத்துடன் தன் கம்பெனியை மூடி விட்டார். தன் மாப்பிள்ளை போன பிறகு அவருக்கு வாழ்க்கையில் சுவாரஸ்யம் குறைந்து விட்டது" என்று முடித்தார்.

"அது சரி; உண்மையாகவே முருகய்யன் மேல் தெய்வம் வந்திருக்காது என்று நீங்கள் எப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"அதையும் சொல்லி விடுகிறேன். என் நண்பன் ஒருவன் அதே கம்பெனியில் இருந்தான். அந்தக் கடைசி நாடக தினத்தன்று சாயந்திரம் முருகய்யன் தன் அறையில் தனக்குத் தானே பேசிக் கொண்டிருந்ததை அவன் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான். 'இன்று அவனை நிஜமாகவே' கொன்று விடுகிறேன்' என்று முருகய்யன் சொல்லிக் கொண்டதை அவன் கேட்டான். பின்னல் அதை என்னிடம் மட்டும் சொன்னுன். போலீஸுக்கு இந்த விஷயத்தைச் சொல்லி மட்டும் என்ன பிரயோஜனம் என்று எண்ணி, அதை மறைத்து விட்டோம்" என்ருர்.

பிறகு இருவரும் படுத்துக் கொண்டோம். அவர் சிறிது நேரத்தில் தூங்கிப் போய் விட்டார். எனக்கு மட்டும் தூக்கம் வரவே யில்லை. வெகு நேரம் வரை உண்மையும், நடிப்பும் கலந்த அந்த இரட்டை வாழ்க்கையைப் பற்றி நினைத்துக் கொண்டே யிருந்தேன்.



இது செய்தி

காந்திஜீ கொலை வழக்கில் சினிமா நடிகை சாக்ஷியம்

காந்திஜீ கொலை சம்பந்தமாக நடை பெற்று வரும் வழக்கில் சர்க்கார் தரப்பில், மஹாராஷ்டிர நடிகையான ஸ்ரீமதி சாந்தா பாஸ்கர் மோடக், இம்மாதம், 3-ம் தேதி சாக்ஷியம் கூறினார். இவர் "பிம்பா" என்ற புனை பெயருடன் பம்பாயில் படங்களில் நடித்து வருகிறாராம்.

செய்திப் படத்திற்குத் தடை

பீஹார் மாஹாண சர்க்கார், 'காந்திஜீ கொலை வழக்கு' அல்லது 'கோட்ஸே விசாரணை' என்ற செய்திப் படத்தை பீஹார் மாஹாணத்தில் திரையிடக் கூடாதென தடை விதித்திருக்கிறார்களாம்.

தியேட்டர்களில் புகை பிடிக்காதே!

பொதுஜன சுகாதாரத்தையும், ஒழுக்கத்தையும் பாதுகாக்கும் நோக்கத்துடன் பம்பாய் நகர சினிமாத் தியேட்டர்களில் புகை பிடிக்கக்கூடாதென சென்றமாதம் 20ம் தேதியன்று பம்பாய் போலீஸ் கமிஷனர் ஒரு உத்திரவைப் பிறப்பித்துள்ளார். பம்பாய் பொழுது போக்குச் சட்டப்படி இந்த உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதை மீறுகிறவர்கள் அச்சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள்.

சமீபத்தில், மேற்படி, உத்தரவை மீறியதற்காக அஹமதாபாத் போலீஸார் அநேகரைப் பிடித்து, தலைக்கு மூன்று ரூபாய் வீதம் அபராதம் விதித்தார்கள்.

நாடகத்திற்குத் தடை

"இரண்யன் அல்லது இணையற்ற வீரன்" என்ற நாடகத்தை சென்னை மாஹாணத்தில் நடிக்கக் கூடாதென சென்னை சர்க்கார் இம் மாதம் 2-ம் தேதி யன்று உத்தரவு பிறப்பித்துள்ளனர். "பாரதி தாஸன்" எழுதியுள்ள இந்த நாடகத்தில் அவதூறான விஷயங்கள் அடங்கியிருப்பதே இந்த உத்தரவுக்குக் காரணமாம்.

தணிக்கை போர்டுக்கு புதிய மெம்பர்

சென்னை தணிக்கை போர்டில் ஏற்கனவே உள்ள அங்கத்தினர்கள் தவிர, ஸ்ரீ. ஸி. வி. ஹநுமந்தராவும் போன மாதம் 21-ம் தேதி ஒரு அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தணிக்கை செய்வதில் ஒரே கொள்கை

சினிமாப் படங்களை தணிக்கை செய்வது சம்பந்தமாக இந்தியா பூராவுக்கும் ஒரே மாதிரியான கொள்கையை வகுக்க, மத்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. குழந்தைகளும் சிறுவர்களும் பார்க்கத் தக்கதல்ல என்று கருதப்படும் படங்களை வயது வந்தோருக்கு மட்டிலுமே காட்டலாம் என்று தடை விதிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாம். இதற்கேற்ற முறையில் சீக்கிரமே இந்திய சினிமாச் சட்டம் திருத்தப்படப் போவதாகத் தெரிகிறது.

நடிகைகளின் நன்கொடை

பிரபல வடநாட்டு நடிகைகளான கண்ணன் பாலாவும், பாரதியும் முறையே ஐம்பதினாயிரம் ரூபாயையும், இருபத்தி ஐயாயிரம் ரூபாயையும் சித்த ரஞ்ஜன் ஸேவாஸதனத்தின் 'கான்ஸர்' வைத்தியப் பகுதிக்கு நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார்களாம்.

இனி 'டிரெயிலர்'கள் காட்டலாம்

சென்னை நகரிலும், செம்பியம் பிரதேசத்திலும் தியேட்டர்களில் 'டிரெயிலர்' (மாதிரிப்) படங்களைக் காட்டக்கூடாதென மின்சார ரேஷன் உத்திரவின் கீழ் விதிக்கப்பட்டிருந்த தடைகளை சென்னை சர்க்கார் ஜூலை மாதம் 30-ம் தேதி முதல் ரத்து செய்து விட்டனர். செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள, (சென்னை நகரத்திலிருந்து மின்சார சப்ளை பெறும்) ஊர்களிலும் தியேட்டர்களிலும் இனி 'டிரெயிலர்'களைக் காட்டலாம்.

வ. ரா. மணிவிழா

அடுத்த மாதம் 17-ம் தேதி நடைபெற விருக்கும் பிரபல எழுத்தாளர் வ. ரா. அவர்களின் மணி விழாவின் போது அவருக்கு ஒரு பண முடிப்பை அளிக்க ஏற்பாடாகி வருகிறது. அந்த நிதிக்கு, எஸ். எஸ். வாஸன், கிருஷ்ணன்-பஞ்சு, டின் ஷா, எஸ். வி. ஸஹஸ்ரநாமம், தமிழ் நாடு டாக்கீஸார், எம். எம் தண்டபாணி தேசிகர் போன்றவர்கள் உதவி செய்திருக்கின்றனர்.

சினிமா நிர்வாகிகள்மீது புகார்

தென்னிந்திய சினிமா சிப்பந்திகள் சங்கத் தலைவரான டி. எஸ். ராமாநுஜமும், பொதுக் காரியதரிசி ஸி. கே. நடேச நாயக்கரும், தொழில் மந்திரி ஸ்ரீ. சீதாராம ரெட்டியிடம் ஆகஸ்ட் 2-ம் தேதியன்று ஒரு மகஜரைக்கொடுத்துள்ளனர். சினிமா சிப்பந்திகள் தகராறு காரணமாக சமீபத்தில் அறிவிக்கப்பட்ட தீர்ப்பின் ஷரத்துகளை சினிமா முதலாளிகள் மீறுவதாக அதில் குறிப்பிட்டு, சட்டத்தை மீறுகிறவர்களை தொழில் தகராறு சட்டத்தின் கீழ் சர்க்கார் தண்டிக்க வேண்டுமென வற்புறுத்தியுள்ளனர்.

தொழிலுக்கு பாதகமானது

மேற்கு வங்காள சர்க்காரின் யோசனை (சினிமாத் தொழிலை அரசாங்கம் ஏற்று நடத்துவது) அநாவசியமானது என்றும், அது தொழிலுக்கு ஹானி விளைவித்து விடுமென்றும், கல்கத்தாவில் ஒரு பொதுக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றனவாம்.

புதிய தியேட்டர்கள்

சென்ற மாதம் 22-ம் தேதியன்று திண்டுகல்லுக்கு அருகிலுள்ள நாகல் என்ற இடத்தில் "அரசு டாக்கிஸ்" என்ற ஒரு தியேட்டரும், திண்டுக்கல்லில் "ஷண்முகா" டாக்கிஸ் என்ற தியேட்டரும் புதிதாகத் திறக்கப்பட்டிருக்கின்றன.

சுப்புவின் கதா காலக்ஷேபம்

கொத்தமங்கலம் சுப்பு சென்ற மாதம் 24-ம் தேதி கும்பகோணத்திலும், இம்மாத ஆரம்பத்தில் வாலாஜாபாத்திலும் தாம் இயற்றியுள்ள "காந்தி மகான் கதை"யை காலக்ஷேபம் செய்தாராம்.

சின்னப்பாமீது வழக்கு

பிரபல நடிகர் பி. யு. சின்னப்பா சென்ற மாதம் 26-ம் தேதி புதுக்கோட்டையில் போலீஸாரால் 'மது வருந்திய' குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார். பிறகு அவருக்கு சொந்தமான இரு வீடுகளிலிருந்து மதுபான வகைகள் கண்டு பிடிக்கப் பட்டனவாம். அதோடு கூட மதுவருந்தியிருந்த சமயத்தில் சின்னப்பா தம் அண்டை வீட்டுக் காரர்களான செல்லய்யா, சந்தானம் பிள்ளை ஆகியோருக்கு படுகாயங்களை ஏற்படுத்தியதாகவும் சொல்லப்படுகிறது. சின்னப்பா தற்போது ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். ஆனால் காலை 9 மணிக்கும் இரவு 9 மணிக்கும் பிரதி தினமும் அவர் நகர இன்ஸ்பெக்டர் முன் ஆஜராக வேண்டுமாம். அவர் மீது இ. பி. கோ. 326-வது பிரிவின் கீழும், மதுவிலக்குச் சட்டத்தின் கீழும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

கிருஷ்ண பக்தி
டைரக்ஷன்: R.S.மணி
பி. யு. சின்னப்பா, டி. ஆர். ராஜகுமாரி
முதலிய பல
பிரபல நக்ஷத்திரங்கள் நடித்த படம்
★
விரைவில் பூர்த்தியாகி வருகிறது
கிருஷ்ணா பிக்சர்ஸ்
சென்னை. 17.
நவீன்

எஸ். எஸ். வாஸனுக்கு வரவேற்பு

சென்ற மாதம் 18-ம் தேதி சந்திரலேகா நூறுவது தின விழா சம்பந்தமாக விஜயவாடாவுக்கு விஜயம் செய்த ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாஸனுக்கு, விஜயவாடா நகரசபை ஒரு உபசாரப் பத்திரத்தை அளித்தது குறிப்பிடத் தக்கது. அன்று காலை மாருதி தியேட்டரில் சந்திரலேகாவின் நூறுவது நாள் கொண்டாட்டம் நடைபெற்றது. பேமஸ் பிலிம் சர்க்யூட்டார் அவருக்கு விருந்தளித்தனர்.

மறுநாள் மசூலிப்பட்டிணத்தில் மினர்வா டாக்கிஸில் சந்திரலேகாவின் நூறுவது நாள் கொண்டாடப்பட்டது. வாஸனுக்கு தேநீர் விருந்தளிக்கப்பட்டது. சந்திரலேகாவைப் பாராட்டிப் பலர் பேசினார்கள். இவை தவிர வேறு பல சங்கங்களும் ஸ்ரீ. வாஸனுக்கு வரவேற்புப் பத்திரங்களை அளித்தன.

திண்டுக்கல்லில் வைரம்

வைரம் அருணசலம் செட்டியாரின் ஸ்ரீ ராம பால கான சபையின் நாடகங்கள் இம்மாதம் 5-ம் தேதி முதல் திண்டுக்கல் சோலை ஹாலில் நடைபெற்று வருகின்றன. முதல் நாடகம் அவர்களுக்கு ஆகிவந்த திருமழிசை ஆழ்வார்தான். நல்ல ஆதரவு கிடைத்து வருகிறதாம்.

> **கண்டுபிடித்தீர்களா ?**
>
> சென்ற ஊசியில் 31ம் பக்கத்தில் வெளிவந்திருக்கும் தாடிப் பெரியார் யாரென்று கண்டு பிடித்தீர்களா ?
>
> அவர் "ஸ்ரீ ஆண்டாள்" படத்தில் பி. எஸ். கோவிந்தன்.

டி. கே. எஸ். சகோதரர்களுக்கு வரவேற்பு

சென்னையில் நாடகங்கள் நடத்தவரும் மதுரை ஸ்ரீ பால ஷண்முகானந்த சபையின் உரிமையாளர்களான டி. கே. எஸ். சகோதரர்களுக்கு வரவேற்பு அளிக்க நாடக அபிமானிகளால் இம்மாதம் 21ம் தேதி சென்னை உட்லண்ட்ஸ் ரெஸ்டாரண்டில் ஒரு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. வி. க., தலைமை வகித்தார். தேநீர் விருந்திற்குப் பின் ராவ்பகதூர் சம்பந்த முதலியார், ரா. நா., பொ. சிவஞான கிராமணியார், மற்றும் பலர் டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகங்களைப் பற்றியும், அவர்கள் நாடகக் கலைக்குச் செய்து வரும் தொண்டைப்பற்றியும் பாராட்டிப் பேசினார்கள். முடிவில் சகோதரர்களின் சார்பாக டி. கே. ஷண்முகம் எல்லோருக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

குமரி

ராமானந்தா பிக்சர்ஸின் அடுத்த படமான குமரியில் பிரதம பாகங்களில் நடிக்க எம். வி. ராஜம்மாவும்—டி. ஈ. வரதனும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றார்களாம். டைரெக்ஷன் வேம்பு தான்.

அதிக உணவு உற்பத்தி செய்

நாகபுரி சர்க்கார் அதிக உணவு உற்பத்தி செய் என்ற ஒரு செய்திப் படத்தைத் தயாரிக்கப் போகிறார்களாம். இதற்கு ரூ. 70,000 செலவாகிறதாம். மற்றும் நான்கு மாகாணங்கள் இந்த செலவைப் பகிர்ந்து கொள்ள சம்மதித்திருக்கின்றனவாம்.

ஓ. ஆர். பாலு காலமானார்

திருச்சியில் பிரபல டாக்டராயிருந்த ஓ. ஆர். பாலு இம்மாத முதலில் காலமானார். ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் நடிப்பதில் பெயர் பெற்றவர் அவர். ஜூபிடர் "ஸ்ரீ முருகன்" படத்தில்சூரபத்மனாக நடித்திருக்கிறார்.

சினிமா ரஸிகர்கள் சங்கம்

இம்மாதம் 6-ந் தேதி மேற்படி சங்கத்தின் ஆதரவில் ஒரு கூட்டம் நடைபெற்றது. 'பிக்சாபோஸ்ட்' பத்திரிகையின் ஆசிரியரான என். ஸ்ரீநிவாஸன் "படங்களில் உள்ள குறை" என்பது பற்றிப் பேசினார். மேயர் டாக்டர் யூ. கிருஷ்ணராவ் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

சினி டெக்னிஷியன்கள் ஆட்சேபனை

இவர்கள் சங்கத்தின் ஆதரவில் இம்மாதம் 8-ம் தேதி எல். வி. பிரஸாத் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

தொழில் கமிஷனர் செய்துள்ள சம்பள விகித சிபாரிசை எதிர்த்து பலர் பேசினார்கள். அந்த சிபாரிசு தங்களுடைய சம்பள விகிதத்திற்கு பாதகமாக இருப்பதாகவும்; இந்த சிபாரிசு சினிமாத் தொழிலுக்கே இடைஞ்சலானது என்றும், ஆகவே இத் தொழிலில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டது.

நீண்ட நேரம் விவாதம் நடைபெற்றது. மேற்படி சிபாரிசில் தங்களுக்கு பாதகமாக உள்ள விஷயங்களை நீக்கும்படி கேட்பதற்காக நிர்வாகக் கமிட்டியினர் தொழில் கமிஷனரிடம் தூது போவதென்று ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது.

திருமழிசை ஆழ்வார்

ஸ்ரீ கண்ணா பிக்சரின் "திருமழிசை ஆழ்வார்" இம்மாதம் 16-ம் தேதி தணிக்கை போர்டாரால் பார்வையிடப்பட்டதாம்.

ஜூபிடரில் பானுமதி

ஜூபிடர் பிக்சர்ஸாரின் படம் ஒன்றில் நடிக்க பானுமதி ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறாராம். இப்படத்தை டி. பாலஜி சிங் டைரெக்ட் செய்வா

மோல்டிங் மேஸ்திரி :...என்னப்பா, சும்மா குந்திக்கினு இருக்கீங்களே. நம்ம ஸ்டுடியோவிலே கூடவா வேலை நிறுத்தம்.

வேலையாள் :—அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க! நம்ம ஸ்டுடியோவிலே வேலை இருந்தான்னா நிறுத்தறதுக்கு!

ரென்றும், கதை, வசனம், "இளங்கோவனு"டையதாக இருக்குமென்றும் தெரிகிறது.

புஷ்பவல்லி தாயாரானார்

பிரபல ஆந்திர நடிகை புஷ்பவல்லிக்கு சமீபத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்திருக்கிறது.

நக்ஷத்திரங்களின் கச்சேரி

சுதந்திர தினத்தன்று அகில இந்திய ரேடியோவில் தியாகராஜ பாகவதர், என். ஸி. வஸந்தகோகிலம், தண்டபாணி தேசிகர், டி. சூர்யகுமாரி, எம். எஸ். சுப்புலக்ஷ்மி முதலியவர்களின் கச்சேரி நடைபெற்றது.

மீண்டும் ராம்சிங்

ஸ்ரீராம பாலகான சபையிலிருந்து விலகிய நடிகர் கே. ஆர். ராம்சிங் திரும்பவும் மேற்படி சபாவில் சேர்ந்திருக்கிறார். தற்பொழுது திருமழிசை

ஆழ்வார்' நாடகத்தில் அவர் பல்லவனாக நடித்துவருகிறாராம்.

ஸ்ரீ ரத்னா பிக்சர்ஸ்

சென்னை, அமிஞ்சிக்கரையில் ஸ்ரீ. பி.வி.முனிரத்ன நாயுடு அவர்களை நிர்வாக பாகஸ்தராகக் கொண்டு இப்பெயருடன் ஒரு புதிய விநியோகக் கம்பெனி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கிருஷ்ண பக்தி தமிழ்ப் படத்தின் சென்னைநகர விநியோக உரிமைகளை வாங்கியுள்ளனர். நக்ஷத்திர நடிகர்கள் பலர் நடிக்கும் இப்படத்தை சிறந்த முறையில் திரையிட ஸ்ரீ. முனிரத்ன நாயுடு அவர்கள் முயற்சி எடுத்து வருகிறார்.

சுதந்திர விழா

சினிமா டெக்னிஷியன் சங்கத்தார் சுதந்திரவிழாவை சிறப்பாகக் கொண்டாடினார்கள். விழா ஸாகர் டாக்கீஸில் ஸ்ரீ.கே. காமராஜ் நாடார் தலைமையில் நடைபெற்றது. சங்கத் தலைவர் எல் வி. பிரசாத் கொடியேற்றி வைத்தார். டி. சூர்யகுமாரி தேசிய கீதம் பாடினார்.

ராம்னாத்—சேகர்

ஜெமினி ஸ்டுடியோவிலிருந்து ராம்னாத்—சேகர் இருவரும் விலகிவிட்டார்கள். தங்களது காரியாலயத்தைத் தனியாக தியாகராயநகரில் ஆரம்பித்திருக்கிறார்கள். இனி அவர்கள் எந்த தனிப்பட்ட முதலாளிகளுக்கும் உதவி செய்வார்களென்று தெரிகிறது. சமீபத்தில் ஜெமினி ஸ்டுடியோ கலை-விளம்பர இலாக்கா நிர்வாகிகள், விலகிப்போகும் தங்கள் டைரெக்டரான சேகருக்கு ஒரு தேனீர்விருந்தளித்தனர்.

நீங்கள் விரும்பும்
சினிமா ஸ்டைலில் போட்டோ
எடுத்துக்கொள்ளத் தகுதியான இடம்
பாரத் ஸ்டுடியோ
மவுண்ட் ரோட போஸ்ட் ஆபீஸ் எதிரில்
போன் - 8172 மதராஸ் 2.
சினிமா நக்ஷத்திரங்களுக்கு
பிடித்தமான இடமும் இதுவே!
நீங்களும் குறைந்த செலவில் சினிமா
நக்ஷத்திரங்களைப்போல போட்டோ
எடுத்துக்கொள்ளுங்கள்

பாபுஜி

[மாதப் பத்திரிகை. ஆசிரியர் — ஜீ. சதாசிவம் (லால்ஜி). விலை அணா 2. கிடைக்குமிடம்: பாபுஜி காரியாலயம், 38, நாகப்பய்யர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.]

குழந்தைகளை வளர்ப்பது ஒரு தனிக் கலையாகும். குழந்தைகளை சரியானபடி வளர்ப்பதற்கும், அவர்களுடன் பழகுவதற்கும் ஒருவருக்கு அவர்களுடைய மனோதத்துவம் நன்கு தெரிந்திருக்க வேண்டும். ஆசிரியர் சதாசிவம் பத்திரிகை உலகில் நீண்ட நாள் அநுபவம் உடையவர். குழந்தைகளின் மனோதத்துவம் நன்கு தெரிந்தவர். சில பத்திரிகைகளில் அவர் பாலர் பகுதிகளை நடத்தி வந்திருக்கிறார். சென்னை ரேடியோவில் குழந்தைகளின் நிகழ்ச்சிகளை அவர் அடிக்கடி நடத்தி வருகிறார்; இப்பொழுது "பாபுஜி"யை வெளிக்கொண்டு வருவதன் மூலம் அவரது நெடுநாளைய அவா பூர்த்தியடைகிறது எனலாம். ஸ்ரீ. சதாசிவம் குழந்தைகள் விஷயத்தில் மிகுந்த அனுபவம் உடையவராதலால் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கு மென்றே பிரத்தியேகமாய் ஆரம்பித்துள்ள இப்பத்திரிகை எதிர்காலத்தில் நல்ல புகழ் பெறும் என்று எதிர்பார்க்கிறேன். சிறுவர்களின் பொழுதுபோக்கு, அறிவு வளர்ச்சி இவைகளுக்கேற்ற கட்டுரைகளும், கவிதைகளும், துணுக்குகளும் இதில் அடங்கி யிருக்கின்றன. இது போன்ற நல்ல சிறுவர் பத்திரிகைகளுக்கு பெற்றோர்கள் தகுந்த ஆதரவு காட்ட வேண்டும்.

— "கோ"

ஜெமினி ஸ்டுடியோ ஆர்ட் விளம்பர டைரெக்டராக இருந்த ஸ்ரீ. ஏ. கே. சேகருக்கு மேற்படி இலாகா நிர்வாகிகள் அளித்த பிரிவு உபசாரத்தின் போது எடுத்த படம். முன் வரிசை, ஸ்ரீ. அஹமத், ஸ்ரீ. வி. கே. என். சாரி, ஸ்ரீ. சேகர், ஸ்ரீ. ஏ. எஸ். மேனன், ஸ்ரீ. கிருஷ்ணஜி.

WATCHES · CLOCKS
TIME PIECES · FOUNTAIN PENS
ROLLED GOLD JEWELLERY
GIFT ARTICLES, ETC.

E. A. WATCH COMPANY

ESTᴰ 1915

RATTAN BAZAR
— MADRAS —

பிரம்ம லோகம்

விஜயகுமாரி

ஜுபிடர் பிக்சர்ஸின் இப்படம் தீபாவளி வெளியீடாக இருக்கலாம். ராஜகுமாரி சம்பந்தப்பட்ட பாகங்கள் சென்ற மாதம் படமாக்கப்பட்டன. ராஜகுமாரி இந்தப் படத்தில் வெவ்வேறு குணங்கள் உடைய இரு பாத்திரமாக நடிக்கிறார். கே. ஆர். ராம்சிங் ராஜகுமாரியை ஆட்டிவைக்கும் சர்வாதிகாரியாக நடிக்கிறார். இப்படத்தின் வசனங்களில் 'கர்மயோகி'க்குப் பங்கு உண்டாம்.

பவளக்கொடி

பக்ஷிராஜா பில்ம்ஸ் பவளக் கொடி மளமளவென்று வளர்ந்து வருகிறதாம். தீபாவளிக்குத் திரையிடப்பெறும் படங்களில் இதுவும் ஒன்றுதான். ராஜகுமாரி, மஹாலிங்கம், சரோஜினி, டி. ஈ. வரதன், கிருஷ்ணன்-மதுரம் முதலியோர் நடிக்கும் படம்.

வேதாள உலகம்

'மேனா'வின் தயாரிப்பான இப்படம் இம்மாதம் 11-ம் தேதி தமிழ் நாட்டின் சில நகரங்களில் திரையிடப்பட்டிருக்கிறது. நாட்டியம், சங்கீதம், ஹாஸ்யம், எல்லாம் ஒருங்கே அமைந்த இப்படம் திரையிடப்பட்ட இடங்களில் அமோகமான ஆதரவைப் பெற்று வருகிறதாம். சீக்கிரமே இப்படம் சென்னை பாகங்களில் திரையிடப்படும்.

சந்திரலேகா

ஜெமினியின் இப்படம் தமிழ் நாட்டில் அமோகமான ஆதரவைப் பெற்று வருகிறது. இப்படத்தை ஹிந்தி சம்பாஷணைகளை ஒட்டித் தயாரிக்கும் முயற்சிகள் ஜரூராக நடைபெற்று வருகின்றன. தீபாவளியன்று வட இந்தியாவின் பல தியேட்டர்களில் ஏக காலத்தில் ஹிந்தி சந்திரலேகா திரையிடப் படுமெனத் தெரிகிறது.

நவஜீவனம்

ராஜராஜேஸ்வரி பிக்சர்ஸின் மேற்படி படத்தின் ஷூட்டிங் ஜெமினியில் நடைபெற்று வருகிறது. இப்படத்தில் மேற்கொண்டு டி.ஏ. ஜெயலக்ஷ்மியும், புதுக்கோட்டை சீனுவும் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்களாம்.

நவஜோதி ஸ்டுடியோவில் தயாராகிவரும் "காளிதாஸி"யில் வில்லனாகத் தோன்றி பிரமாதமாய் நடித்து வருகிறாராம் பிரபல ஸி. எஸ். டி. சிங்.

கீத காந்தி

இப்படத்தின் ஷூட்டிங் நெப்டியூன் ஸ்டுடியோவில் கே. சுப்ரமண்யத்தின் டைரெக்ஷனில் தயாராகி வருகிறது. தற்காலத்திய பல பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்ட கதை. பி. எஸ். சரோஜா, பி.ஏ. பெரியநாயகி, குமார், டி.ஆர். ராமச்சந்திரன், டி. எஸ். மஹாதேவன், டி.கே. கோவிந்தன், டி. கே. கல்யாணம், டி. கே. பட்டம்மாள் முதலியோர் நடிக்கிறார்கள் இந்தப் படத்தில்.

முத்துத்தாண்டவர்

"மாவன்னா"வின் முயற்சியில் ஆரம்பித்திருக்கும் ஏ த்ரீ பிக்சர்ஸ் லிமிடெட் படமான "முத்துத்தாண்டவர்" ன் பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுவருகின்றன. டி. ஆர். மஹாலிங்கம், எம். வி. ராஜம்மா, நடனமணி ஏ. என். பெரியநாயகி, புதுக்கோட்டை சீனு ஆகியோர் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்கள். படத்திற்கான கதை, வசனங்களை 'இளங்கோவன்' தயாரித்து வருகிறார்.

தேவமனோஹரி

ஆர். கே. எஸ். பிக்சர்ஸின் இப்படம் சம்பந்தமான காட்சிகள் ப்ரகதி ஸ்டுடியோவில் படமாக்கப் பட்டு வருகின்றன. பி. எஸ். சரோஜா, ஹொன்னப்ப பாகவதர் பிரதம பாகத்தில் தோன்றும் இந்தப் படத்தில் மற்றும் லக்ஷ்மி, கே. வி. ஸ்ரீனிவாஸன், காளி. என். ரத்னம், டி. கே. கல்யாணம் முதலியோரும் நடிக்கிறார்கள்.

ஆண்டாள்

திரையிடத் தயாராக இருக்கும் இந்தப் படம் இம் மாத இறுதியில் திரையிடப் படலாமெனத்

தெரிகிறது. வேல்சாமிக் கவி இப்படத்தை சிறந்த முறையில் சிரத்தையுடன் தயாரித்து முடித்திருக்கிறாரென்று கேள்வி.

ஆதித்தன் கனவு

மாடர்ன் தியேட்டர்ஸின் இப்பொழுது டி. ஆர். மஹாலிங்கம் தோன்றும் கட்டங்கள் படமாக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே ஒப்பந்தமானவர்களைத் தவிர அஞ்சலி தேவியும் முக்கிய பாகம் ஒன்றில் நடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறாராம்.

பிழைக்கும் வழி

படப் பிடிப்பு முடிந்து 'எடிட்டிங்' நடைபெற்று வரும் இப்படமும் சீக்கிரமே திரையிடப்படலாம். ஹாஸ்ய நடிகர்கள் பலரும் தோன்றும் இப்படத்தில் "நாம் இருவர்" புகழ் ஜெயலக்ஷ்மி கதாநாயகியாக நடிக்கிறார்.

கோகுலதாஸி

படப் பிடிப்பு முடிந்து திரையிடத் தேதியை எதிர்பார்த்திருக்கும் படங்களில் இதுவும் ஒன்று. கே. சுப்ரமண்யத்தின் டைரெக்ஷனில் தயாரான திரன் கம்பெனி படமிது.

இன்பவல்லி

சியாமளா பிக்சர்ஸின் இப்படத்தின் சங்கீத ஒத்திகை மியூஸிக் டைரெக்டர் ராமனாதனின் மேற்பார்வையில் சென்னையில் நடைபெற்றுவருகிறதாம். இப்படத்தில் கிருஷ்ணனும் மதுரமும் நடிக்க ஏற்பாடாகியிருக்கிறதாம்.

பரதன்

தமிழாக்கப்பட்ட 'பரத்மிலாப்' இந்த நாமகரணத்துடன் தமிழ் நாட்டில் சீக்கிரமே திரையிடப்பட இருக்கிறது. ராமராஜ்யத்திற்குக் குரல் கொடுத்த அவ்வளவு பேர்களும் இதற்கும் குரல் கொடுத்திருக்கிறார்கள்.

தேவ குமாரி

ஸ்டார் கம்பைன்ஸின் சொந்த ஸ்டுடியோவில் தயாராகப்போகும் அவர்களின் இந்தப் படத்தில் மேனகா பிரதம பாகத்தில் நடிப்பார் என்று தெரிகிறது.

போஜன்

சென்ற மாதம் 31-ம் தேதி இப்படம் தமிழ் நாட்டின் முக்கியமான நகரங்களில் திரையிடப்பட்டுள்ளது. வரலக்ஷ்மி-கோவிந்தன் பிரதம பாகங்களில் நடிக்கும் இந்தப் படத்தில் லலிதா-பத்மினியின் 'வள்ளி திருமணம்' நாட்டிய நாடகமும், தாரா சௌத்ரியின் நாடோடி நாட்டியமும் விசேஷ அம்சங்களாக அமைந்திருக்கின்றனவாம்.